
தேனருவி
ஆடி ஊற்று
thenaruvi
விலை
25
சதம்

யாழ்ப்பாண மண் வாசனை வீச......
'சாணு'வின் மனதிலெழுந்த
மனிதர்களினதும் சம்பவங்களினதும்
தொகுப்பு .........

# "பரியாரி பரமர்"



யாழ்ப்பாண மண்வாசனை வீச......
சாணுவின் மனத்தில் மிதந்து வந்த
சம்பவங்களினதும் மனிதர்களினதும்
தொகுப்பு
பரியாரி பரமர்

விபரங்கட்கு:

வசந்தா பதிப்பகம்
29/5, முகாந்திரம் வீதி, கொழும்பு-12.

★ இலங்கைத் தேசிய இலக்கியம் பற்றி
க. நா. சு.

★ 'மெற்றபிஸிக்கல்' பற்றி
சிவகுமாரன்.

★ பாரதி பற்றி தி. க. சி;
தமிழ்ஒளி.

"ஆனந்தி"

# எண்ண மஞ்சரி

## இலங்கைத் தேசிய இலக்கியம் பற்றி க. நா. சு.

அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த இரு இலக்கிய ரசிகர்களைப் பற்றிக் கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேனல்லவா? அவர்கள் பன்மொழிப் பாண்டித்யம் பெற்றவரும், இலக்கிய விமர்சகருமான க. நா. சுப்பிரமணியத்தைச் சந்திக்கச் சென்றுராம். அவருடன் ஈழத்து இலக்கிய முயற்சிகள் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டு இருக்கும் பொழுது, அப்பொழுது 'மரகத'த்தில் தொடர்ச்சியாக வெளிவந்த 'தேசிய இலக்கியம்' பற்றிய பிரஸ்தாபம் வந்தது. அமெரிக்காவிலேயே இல்லாத பறவையான 'வானம்பாடி' பற்றி அமெரிக்கக் கவிஞர்கள், இங்கிலாந்து இலக்கியத்தின் தன் வயப்பாட்டால், பாடிக் கொண்டிருந்த காலத்தில் தேசிய இலக்கிய இயக்கம் அங்கு தோன்றியது. மண்வளம் பிரதிபலிக்க இலக்கியம் சமைக்க வேண்டும் என்ற கோஷம் வலுவடைந்தது. அதற்கு வால்ட் விட்மன் போன்ற கவிஞர்கள் உறுதுணையாக இருந்தார்கள். இதைக் குறிப்பிட்ட க. நா. சு. கல்கி, குமுதம், விகடன் முதலிய சஞ்சிகைகளில் வரும் சிறுகதைகள், தொடர்கதைகள் முதலிய 'பத்திரிகைக் கதைகள்' தான் இலக்கியம் என்ற மயக்க நிலையைப் போக்கத் தேசிய இலக்கியம் என்ற இயக்கம் என்ன, எந்த இயக்கத்தை இலங்கையில் தொடங்கினுலும் தம் ஆதரவு உண்டு என்றும் சொன்னுராம். இன்று ஓர் பிரபல பத்திரிகையில் ஆசிரியஸ்தானத்திலிருக்கும் ஒரு பண்டித வித்வானைப் பற்றிச் சில விஷயங்கள் சொன்னுராம். அதை இங்கு குறிப்பிடுவதால் சிலருடைய மனம் புண்படும் என்ற காரணத்தால் விட்டு விடுகிறேன். அடுத்த 'எண்ண மஞ்சரி'யில் பிரபல சிறுகதை ஆசிரியரான 'மௌனி' யுடன் அவர்கள் தங்கியிருந்த பொழுது கிடைத்த தகவல்கள் சிலவற்றை எழுதுகிறேன்.

ஃ

## 'மெற்றபிஸிக்கல்' பற்றி சிவகுமாரன்

கடந்த இதழில் 'மெற்றபிஸிக்கல்' என்ற ஆங்கிலப் பிரயோகத்

துக்கு விளக்கம் கொடுத்தேனல்லவா? அது தவருன விளக்கம் எனச் சிறுகதை எழுத்தாளரும், இலக்கிய விமர்சகருமான கே. எஸ். சிவகுமாரன் ஓர் கடிதம் எழுதியுள்ளார். அதை அப்படியே கீழே கொடுத்துள்ளேன். அதைப் பற்றி எனது கருத்தை அடுத்த 'எண்ண மஞ்சரி'யில் குறிப்பிடுகிறேன்.

'மெற்றபிஸிக்கல் என்ருல் என்ன?' என்ற தலைப்பின் கீழ் தாங்கள் எழுதியுள்ள வியாக்கியானம் சற்றுத்தவருனது என்று நினைக்கிறேன். குணகூடமான (ABSTRACT) பொருட்களைப்பற்றிய சிந்தனை; அல்லது பொருட்களுக்கும் சிந்தனைக்குமுள்ள தொடர்புகள்; அறிவதும் இருப்பதுமான நிலைபற்றிய தத்துவம்; எந்தச் சாத்திரத்துக்குமே அடிப்படையாக விருக்கும் சித்தாந்தக் கோட்பாடுகள்! மனித சிந்தனையின் தத்துவம் என்பதெல்லால் 'மெட்டபிஸிக்கல்' என்பதனுள் அடங்கும். இதனைத் தமிழில் 'மானதத்துவ' என்று அழைப்பது பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

டொக்ரர் ஜோன்ஸன்தான் முதன் முதலில் 'மெற்றபிஸிக்கல்' என்ற வார்த்தையை உபயோகித்தார் என்று அறியக் கிடக்கின்றது. (METAPHYSICAL POETRY) என்பது இலக்கியத்தில் ஒருவகைஎன்பது தாங்கள் அறிந்ததே.

தத்துவார்த்த அல்லது ஆத்மார்த்த விஷயங்கள் பற்றிய எந்தக் கவிதையையுமே 'மெட்டபிஸிக்கல்' என்றழைக்கலாமெனினும், பொதுவாக ஜோன் டொன்னே போன்ற 17-ம் நூற்ருண்டுக் கவிஞர்களின் படைப்புகளை விசேடமாக அழைப்பதற்கே இவ்வார்த்தை உபயோகிக்கப்பட்டு வந்தது.

இக்கவிதைகளில் உள்ள முக்கிய அம்சங்கள் எவையெனில்; சாதாரண பேச்சு வழக்கைக் கையாளல், எதிரெதிரான அயுக்த (PARADOSICAL) பாவனை, அறிவியல் துறைகளில் கையாளப்படும் சொற்ருெடர்களினின்று எடுத்த மறைபொருளான வார்த்தைகளை உபயோகித்தல், விரிவான மனேபாவனை ஆகியவையாம். இக்கவிதைகள் சில வேளைகளில் உணர்ச்சிக்கும் அறிவுக்குமிடையே வாதிடும் முறையில் அமைந்துமிருக்கும்,

18-ம் 19-ம் நூற்ருண்டுகளில் மதிப்பிழந்த 'மெட்டபிஸிக்கல்' கவிதைகள் 20-ம் நூற்ருண்டில் மறுமலர்ச்சி பெற்றன. அறிவுத்தெளிவு, உளவியலாராய்ச்சி போன்றவற்றிற்கு இக்கவிதைகள் உதவிபுரிகின்றன. ஒன்ருெடொன்று தொடர்பற்றவையாக, ஒன்றிலிருந்து இன்னென்று வேறுபட்டவையாகத் தமக்குள்ளே எதிர்மறைகளைக் கொண்டுள்ள பொருட்கள் பற்றிய ஒற்றுமையைக் கூறுபவை.

சுருங்கச் சொன்னுல் 'மெட்டபிஸிக்கல்' என்பது தாங்கள் கூறியிருக்கும் வியாக்கியானம் போல் 'பொருட்களை நிலையானவையோ, மாருதிருப்பவையோ' என்ற அடிப்படை நோக்கு இல்லாதது இது பற்றி மேலும் விபரிப்பது அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

தங்கள் 'எண்ணமஞ்சரி' வரவேற்கத்தக்க நல்லதொரு முயற்சி. நன்றி.

-கே. எஸ். சிவகுமாரன்

❀

## பாரதி பற்றி தி. க. சி; தமிழ்ஒளி

1950-ம் ஆண்டு வெளிவந்த ''மாதமணி'' என்ற பத்திரிகையை



# மனுக்காக!

கனக செந்திநாதன்

"மருதப்பு! எழும்பு! இங்கே வா!!"

'ஏன் கணக்குப் புத்தகம் வாங்கவில்லை?'

பதிலில்லை,

'ஏன்ரா வாங்கவில்லை? உன் வாயுள் கொழுக்கட்டையா? வாயைத் திறந்து சொல்லேன்.'

கால் நடுங்குகிறது; கண்ணீர் மல்குகிறது; வாய் பேச மறுக்குகிறது.

ஒரு நிமிஷம்

அவன் உள்ளுணர்ச்சி பேசுகிறது.

'புத்தகம் வாங்க எனக்கு மனமில்லையா? அதற்குப் பணம்? ஒரு ரூபாவா? இரண்டு ரூபாவா? எட்டு ரூபா. அக்ஷர, க்ஷேத்திர, பாடீகணிதம் மூன்றும் வாங்க எட்டு ரூபா. எட்டு ரூபாவுக்கு ஆச்சி எங்கே போவாள்?...நாங்கள் என்ன பணக்காரரோ?'

'கணக்குப் புத்தகங்கள் இல்லாது விட்டால் நாளைக்குப் பள்ளிக்கூடம் வரவேண்டாம்.'

மாஞ்சோலையில் உள்ள மகேஸ்வரி வித்தியாசாலையில் 'கிளிமூக்கு வாத்தியார்' என்று பிள்ளைகளால் வர்ணிக்கப்படும் மருதநாயகம் கட்டளையிட்டுவிட்டார். அவர் கட்டளைக்கு 'அப்பீலே' கிடையாது.

பக்கத்து விருந்தையால்போன தலைமையாசிரியர் கூட அவர் குரலைக் கேட்டு ஒரு கணம் நிற்கிருர். அவருக்குக் கேட்க மருதநாயகம் 'புறுபுறுக்'கிருர்.

'தமிழ்ப் பள்ளிக்கூடமென்ருல் இந்தப் பெற்ருேர்களுக்கு எவ்வளவு அலட்சியம்? புத்தகம் இல்லை. பென்சில் இல்லை. பேனை இல்லை. ஒரு 'இழவும்' இல்லை. இவர்களைப் படிப்பிக்கிறது தான் எப்படி? ஆனுல் இங்கிலீசுப் பள்ளிக்கு விடுகிற தென்ருல் காற்சட்டை....மேல்சட்டை தொப்பி, சப்பாத்து, பௌண்டன்பேனு...இனிமேல் சகிக்கமுடியாது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான்.'

'புறுபுறுப்பு' முடிந்தது புராணபடலம் ஆரம்பித்தது.

'ஏன்ரா தடிமாடுபோல நிற்கிருய்? போய் இரு. இன்றைக்கு மாத்திரம் இருக்க விடுகிறேன். இனிமேல் இந்த 'ஊமைப்பாஷை' எல்லாம் பலிக்காது. உன்னைப் போல உள்ளவர்கள் ஏன் தான் படிக்க வாறியளோ தெரியாது. படிக்கவருகில் அதற்கு ஏற்ற மாதிரி வர வேண்டும், அல்லாது விட்டால் ஆடு மாட்டைப் போய் மேய்க்க வேணும். அல்லது 'வால்சுத்து'க் கட்டப் போகவேணும்.'

கடைசிச் சொல்லை ஆசிரியர் சொன்னதும் பிள்ளைகளில் சிலர் சிரிக்கிருர்கள்.

மருதப்புவின் உடல் கூனிக் குறுகி ஒரு சாண் ஆகிறது. வெட்கத்தால் தலை கவிழுகிறது. தனக்குள்ள 'வால்சுத்து' என்ற பட்

டத்தை எண்ணிப் பிள்ளைகள் சிரிக்கிறார்கள் என்பது அவனுக்குத்தான் தெரியும்.

ஆசிரியர் சாதாரணமாகவே அந்த வார்த்தையைச் சொன்னார். ஆனால் மாணவர்கள் அதற்கு வேறொரு அர்த்தம் கற்பித்து விட்டார்கள். அவன் சுருட்டுக் கடிப்பதால் 'வால்சுத்து' என்ற பட்டம்.

அர்த்தமும் சிரிப்பும்தான் மருதப்புவின் மனத்தை உறுத்தியது.

அவன் மனதில் 'புயல்' அடிக்கிறது. ஆசிரியர் சொல்லுக்கு வியாக்கியானம் செய்கிறது.

என்னரை அப்பு செய்த தொழில் என்ன கெட்ட தொழிலா? களவெடுத்தாரா? பொய் சொன்னாரா? கோடேறினாரா! கொள்ளை அடித்தாரா? சுருட்டுச் சுற்றிப் பிழைத்தார். அதை இவர் குத்திக் காட்டுகிறார் வால்சுத்துக் கட்டட்டாம் என்னையும் உம் '

அதன் பிறகு அவனுக்குப் பாடத்தில் மனமே செல்லவில்லை.

அடுத்து வந்த இலக்கியப் பாடத்தில் 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ' என்ற நளவெண்பாப் பாடலை நல்லாய்த் தெரிந்த 'கரைஞ்சபாடமான' அந்தப் பாடலைக் கூட அவன் தப்பும் தவறுமாகத்தான் சொன்னான்.

அவன். மத்தியானம் கொடுக்கும் பாணைக் கூடக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை, தண்ணீர் கூடக் குடிக்கவில்லை.

அப்பாலும் எத்தனையோ பாடங்கள் நடந்தன. ஆசிரியர் வந்தனர். போயினர். ஆனால் அவன் மனதில் 'சுருட்டுக்காரன்ரை பொடியா! நீயும் சுருட்டுக் கட்டப்போடா' என்ற வார்த்தைகள் தான் உறுத்திக் கொண்டிருந்தன.

பாடசாலைவிடும் மணி அடித்தது

செம்மறி ஆட்டுப் பட்டியில் இருந்து வெளிப்படும் ஆட்டுக்கூட்டம் போல நெரித்தும், மிண்டியும் உழக்கியும் பிள்ளைகள் வெளிப்பட்டு ஓடினார்கள்.

மருதப்புவும் ஓடித்தான் போனான். தன் மன அவஸ்தையைத் தாயாரிடம் கூறி அழ வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

அதனால் அவன் கால் கொண்ட மட்டும் ஓடினான். மனம் கொண்ட மட்டும் ஓடினான். மனம் கொண்ட மட்டும் விரைந்தான்.

'கிட்டிப்புள்' அடிக்க வருகிறாயா?' என்று கேட்ட கிருஷ்ணனுக்கு அவன் பதிலே சொல்லவில்லை. ஓடினான்.

'மணி என்ன தம்பி இருக்கும்?' என வினவிய கிழவருக்கு அவன் விடையே சொல்லவில்லை. விரைந்தான். மாடு ஒன்று குறுக்கே வந்தது. விலத்தினான். மரவேரில் தட்டுப்பட இருந்தான். தப்பிவிட்டான்.

'ஆச்சி! ஆச்சி!! எணை!!.

'ஆச்சி!' என்ற அவலக் குரலைக் கேட்டு நாகம்மா திடுக்கிட்டாள். மகனின் ஏக்கத்தை ஒரே நொடியில் உணர்ந்தாள்,

'என்னடா மருதப்பு! யார் அடிச்சது?'

ஏழைப் பையன்களுக்கு பணக்கார வீட்டுச் 'செல்லங்கள்' எப்போதும் 'நொட்டும்' என்பதும், அதற்குப் பாடசாலைகளில் கூடக் 'கேள்விமுறை' இல்லையென்பதும் அவள் சித்தாந்தம்.

'வாத்தியார் ஏசிப்போட்டார். கணக்குப் புத்தகங்கள் வாங்கவில்லையாம், பள்ளிக்கூடத்துக்கு இனிமேல் வரவேண்டாமாம்' விக்கல் முனகலிடையே திக்கித் திக்கி இவற்றை அவன் வாய் குழறியது.

'போடா! போ!! இதுக்கெல்லாம் அழுகிறியோ? சின்ன வயதிலை அவரை இழந்து கைம் பெண்ணாகி நான் அழுத அழுகை எவ்வளவு? இப்ப இந்த ஊரவை 'அறம் போடுறது' எல்லவளவு? இப்ப என்லாம் அழுகிறனே? ஏழைகள் என்ன செய்கிறது! உந்தக் கண்டறியாத பள்ளிக்கூடம் இல்லாட்டில் இன்னொண்டு.

'இல்லை ஆச்சி, 'வால்சுத்துக் கட்டினவன்ரை பொடியா! நீயும் போய் வால்சுத்துக் கட்டேன்! இங்கை வந்து ஏன் என் கழுத்தை அறுக்கிறாய்?' என்று குத்திக் காட்டுகிறார் அந்தக் 'கிளிமூக்கு' வாத்தியார்' என்று மருதப்பு சொன்னபோது தான் நாகம்மா தீயில் மிதித்தவள் போலானாள்.

'யாரடா சொன்னவன் அப்பிடி? வாத்தியார் சொன்னானா? ஏன் சுருட்டுத்தொழில் அப்படி என்ன பவிசு கெட்ட தொழிலா? தன்ரை கையை நம்பிப் பிழைத்தாரே அவர். நாலு ரூபாவுக்குச் சுத்தினாலும் ராசாத்திபோலை வைச்சிருந்தார். வீடு வீடாகத் திரிஞ்சு பொடியளைப் பிடிச்சு மனேஜருக்கும் பல்லைக் காட்டி சனவாழ்வு நடத்தினதை என்ற வாயாலை கேட்கப் போறானாக்கும் அந்த வாத்தி. நாளைக்கு நான் அவனைக் கேட்கிறன். நீ போய்ச் சோத்தைத் தின்,'

'நான் இனிமேல் உந்தப் பாடசாலைக்குப் போக மாட்டேன்' அவன் குரல் மீண்டும் பலமாய் ஒலித்தது.


'அப்ப என்ன செய்யப் போறாய்?'

'பெரியய்யாவின் கடையிலை போய் நிற்கப் போறன்.'

என்னடா சொன்னாய்? நாகம்மா நெருப்புச்சட்டியிலிருந்து பெரும் அக்கினிக் குண்டத்துள் விழுந்தவள் போலானாள். 'கிளிமூக்கு' வாத்தியாரும் அவர் வாய்ச் சொல்லும் எங்கோ ஓடி மறைந்து கொண்டன. அந்த இடத்தை ஆக்கிரமித்தவை ஆறுமுகமும் அவரது செயல்களுமே.

ஆறுமுகம் அருமையான வாய் குளிர்ந்த பெயர்தான். ஆனால் அவளுக்கு அது கசப்பான பெயர். புண்ணிடைக் கோல் கொண்டு குத்தும் பெயர்.

தன் கணவனுடைய செல்லத்துரைக்கு மூத்தவனாகப் பிறந்து, அவரோடுதான் சுருட்டுக் கொட்டிலில் 'வால் சுத்து'க் கட்டி. தம்பியின் உழைப்பால் தகப்பன் தாயாரை வாழ்வித்து, தன் உழைப்பைக் கொண்டு தட்டிக் கடை வைத்து. தகரக் கடையாக்கி, தங்க நகை அடைவு பிடிக்கத் தத்துவ[illegible] பெற்றுப் பெரிய 'புள்ளி' ஆகிவிட்டவர் அவர். உறவுமுறையெல்லாம் செத்த வீடு, கல்யாண வீடுகளோடு சரி, மற்றப்



படி அவன் யாரோ! அவர் யாரோ!!

அப்படிப்பட்ட ஆத்மாவின் பெயரைத் தன் மகன் உச்சரிக்கவா? ஆத்திரம் பொங்கி வழிந்தது.

'படார்!' கன்னம் சிவக்க அடித்துவிட்டாள். ஐந்து விரல்களும் அப்படியே அவன் கன்னத்தில் பதிந்துவிட்டன.

மருதப்பு 'ஐயோ!' என்று கத்தியபடி பக்கத்துப் பூவரசைக் கட்டிப் பிடித்தான்.

''பறை நாயே!'' என்ன சொன்னாய்? பெரியய்யாவாம் பெரியய்யா! எப்ப வந்த பெரியய்யா!! என்ரை விட்டுப் பெட்டை நாய்கூட அவற்றை வீட்டுச் சோத்தைக்கூடத் தின்னுதடா! நீபோய்த் தின்னப்போறியோ? என்ரை கையை நம்பிப் பிழைக்கிறேன் நான். உனக்குச் சோறும் உடுப்பும் தர என் கையில் வலு இருக்கிறதடா. போடா! போய்ச் சோத்தைத் தின்''.

சனங்கள் கூடிவிட்டார்கள். சிலர் வேலிக்குமேலால் எட்டிப் பார்த்தார்கள். நாகம்மாவின் 'தொண்டைப்பலம்' எல்லோரையும் வரவழைத்துவிட்டது. அப்படிச் சனங்கள் வந்தது அவளுக்கு வெட்கமாகப் போய்விட்டது.

அவள் தன் மகனை அணைத்துக்கொண்டு வீட்டினுள்ளே சென்றாள், கன்னத்தைப் பார்த்தாள். ஒரே வீக்கமாய் இருந்தது. நல்லெண்ணை எடுத்துவந்து அவ்விடத்துக்குத் தேய்த்தாள். ஒருநாளும் சிறு ஈர்க்குக் குச்சியால்கூட அடியாத அவள் இன்று கோப வெறியால் மூடத்தனமாக இப்படி அடித்துவிட்டதை எண்ணிக் 'கோ'வென்று அழுதாள். முகத்தோடு முகம் வைத்து அழுதாள். தாய் அன்பு அணைகடந்த வெள்ளம் அது கோபித்துச் சீறும் உடனேயே குளிர்ந்து மழையாகும்.

ஆனால் இந்த மாற்றங்கள் .. மின்னல் வீச்சுகள் கடுங்கோடை குளிர் மழைகள் அந்தச் சிறுவனுக்குப் புரியவில்லை. தாயின் போக்கே விளங்கவில்லை. சிலவற்றிற்கு அசட்டையாகப் பதில் சொல்கிறாள். உடனே பொங்கி எழுகிறாள் அடுத்தகணமே கட்டி அணைத்துதானே அழுகிறாள். இவள் என்ன கருங்கல்லா?...மெதுமைப் பஞ்சா?

ஃ ஃ ஃ

அன்று இரவு, மருதப்பு தூங்கவில்லை. ஆசிரியரின் கடுஞ்சொல்லும் தாயாரின் வன்முறையும் அழுகையும் அவனைத் தூங்கவிடவில்லை கண்ணைமூடினானே இல்லையோ! .. பிள்ளைகளின் கேலிச்சிரிப்பும், 'கிளிமூக்கு' வாத்தியாரின் சுடுசொல்லும், தாயாரின் சுடுமுகமும் அழுகை ஒலியும் மாறிமாறிப் படத்திரையில் வரும் காட்சி போல மனத்திரையில் இமைகள் மூடியிருந்தனவே யொழிய நித்திரையேயில்லை.

பெட்டை நாய் உறுமும் சப்தம் கேட்டது. அதையடுத்துச் செருப்பின் கிறிச்! கிறிச்!! யாரது? தாயின் கேள்வி பதிலேயில்லை.

நாகம்மா விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டுத் தட்டிப்படலையைத் திறந்து திண்ணைக்கு வருகிறாள், இரு உருவங்கள் வருவது தெரிந்தது 'யார் அவர்கள்? ஏன் வருகிறார்கள்?' அவளுக்கு இரத்தமே உறைந்துவிடும் நிலை

''யாரது?'' உரத்த தொனியில், பயத்தில் கேட்கிறாள். இரவு பத்து மணிக்கு ஆண் துணையே இல்லாத ஒரு வீட்டில், பெண் தனித்திருக்கையில் எப்படிப்பட்ட அல்லிராணியையும் அச்சங்கொள்ளச் செய்யுமே.

''அது நாங்கள். உஷ்! பலத்துப் பேசாதே.''

குரலிலிருந்தும் உருவத்திலிருந்தும் மட்டிடுகிறாள். மருத நாயக ஆசிரியரும் அறுமுகமும்!

மனம் சிந்தனையில் ஆழ்ந்திருக்கை தன் வேலையைச் செய்கிறது. வீட்டுக்குள் போய் நல்ல ஓலைப்பாயொன்றைக் கொண்டுவந்து விரிக்கிறாள்.



இருவரும் உட்காருகின்றனர். ஆசிரியரே பேச்சைத் தொடங்குகிறார்.

''இங்கை பார் நாகம்மா! நாங்கள் இப்போது இங்கே ஏன் வந்திருக்கிறோம் என்று உனக்குத் தெரியுமா? இன்று பின்னேரம் நீ என்னையும் இவரையும் பேசியதாக வழியில் கேள்விப்பட்டோம். அதுதான் '' அவர் வார்த்தையை முடிக்கவில்லை. அவள் பதில் சொல்லத் தொடங்கிவிட்டாள். அதில் ஆத்திரம் தொனிக்கவில்லை. அமைதி இருந்தது. வீடுதேடி வந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மனம் புண்படும்படி பேசக்கூடாது என்ற தமிழ்ப்பண்பு அவளைத் தடுத்திருக்க வேண்டும்.

''அதுதான் வந்திருக்கிறியள் என்று எனக்கும் தெரியும் என்றாலும் காலமல்லாத காலத்தில் வந்திருக்கவேண்டாம். நீங்கள் மருதப்புவைப் புத்தகம் இல்லாமல் பள்ளிக்கூடத்துக்குவரவேண்டாம் எண்டியளாம். அதுக்கென்ன? நாளைக்கு நானேவந்து 'சேட்டிவிக்கற்றை' எடுத்து தின்னவேலியில் உள்ள அநாதைப் பள்ளியிலேயாவது சேர்க்கவேணுமென்று இருக்கிறன். அதுபோகட்டும். சுருட்டுக்காறன்ரை பொடியா போய் வால்சுத்தைக் கட்டேன் எண்டியளாம். அதுதான் பொடியனுக்குப் பெரிய துக்கம். எனக்கும் மிக வருத்தம். அப்பிடி எல்லாம் சொல்லலாமோ? தொழிலிலை பெருமை சிறுமை இருக்கோ? அதுதான் எனக்கு ஆத்திரமாய் வந்தது .. ஏசிப்போட்டேன்''.

மருதநாயகம் பெருமூச்சுவிட்டார். ''இந்த வாத்தியார்த் தொழிலே எச்சுக் கேட்கிற தொழிலாய்ப் போய்விட்டது நாகம்மா. நீயா ஏசுகிறாய்? இந்த ஊரிலை உள்ள எல்லோரும்தான் ஏசுகினம் அதற்காக நான் துக்கப்படுவதில்லை. அதைப்பற்றிப் பறவாய் பண்ணுவதுமில்லை. ஆனால் இந்த ஆறுமுகத்தார் வந்து ஒருக்கால் தன்னோடு வரும்படி சொன்னார். அதுதான் வந்தனான். அவருக்குப் பெரிய துக்கம். அவரைக்கூட நீ ஏசிப்போட்டியாம் என்றார்.

''ஏசாமல் என்ன செய்யிறது வாத்தியாரே! என்ரை பொடியன் படிக்கவேணும். அதுதான் என்ரை ஆசை. நான் எப்பாடு பட்டாகிலும் படிப்பிக்க ஆசைகொண்டிருக்கிறேன். ஆனால் அவனோ கடையிலே நிற்கபோகிறன் என்கிறானே. இந்த விஷமுளையை உடனேயே கிள்ளிப்போடவேணும். ஒரே ஒரு பிள்ளை. அதுகூட இப்படிச் சொன்னா என்ன செய்யிறது? பாருங்கள் நாங்கள் எவ்வளவு கஷ்டப்படுறோம். இவர்களும் பெரியையா என்றுஇருக்கினமே. தம்பியின்ரை மகன் என்று நினைக்கினமோ?''

''அவர் நினைத்தபடியால் தானே வந்திருக்கிறார்'' என்றார் மருதநாயகம்.

''வந்திருக்கிறார்தான் ஏன் வந்திருக்கிறார் என்று எனக்குத் தெரியும். கடையிலை நின்ற பொடியன் ஓடிவிட்டான். இவற்றை மகன் கட்டாக்காலி மாடு. அதைப்பற்றித்தான் ஊரிலை எல்லாருக்கும் தெரியுமே. ஊதாரி என்று. பின்னை என்ன? என்ரை பொடியனைப் பிடித்துக் கடையிலை போடுவம் என்று நினைத்திருக்கிறார். வாத்தியாரே! உது நடவாத சங்கதி'' என்றாள் அவள்.

ஆறுமுகம் செருமினார் சிறிது நேரம் ஒருவருமே பேசவில்லை.

மருதநாயகம்தான் மௌனத்தைக் கலைத்தார். ''நாகம்மா! நீ நினைப்பது பிழை. உலகத்திலேயே சில மனிதர் நினைப்பதுபோல மனிதர் இல்லை. ஆறுமுகம் உனக்கு—உன் மகனுக்கு—ஆறுயிரம் ரூபா தர வந்திருக்கிறார். நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதை உன் மகனுக்கே கொடுக்கப்போகிறார்'' என்றார்.

ஒரு கண மௌனம்.

பின்னர் ஒவ்வொரு வார்த்தையும் நறுக்குத் தறித்தாற்போல வெளிவந்தன.

''அவர் கசநோயால் கஷ்டப்படும்போது தரவில்லை. அவர் என் குழந்தையை மூன்று வயதிலே விட்டுவிட்டுப் போய்விட்டார். அவர் செத்தபோதும் உதவி செய்யலை. பத்து வருசம் கஷ்டப்படும்போதும் ஏனென்று கேட்கலை. இனி அவன் வளர்ந்துவிட்டான். இனி யாருக்கு உதவிதேவை? உதவி தேவைப்படும் போது செய்யாமல் இருந்துவிட்டு இப்போது வலிய வந்து ஆறுயிரம் தருகிறேன் என்றால் இதில் ஏதோ சூது இருக்க வேண்டும். வாழையிலைபோய் முள்ளில் பட்டாலும் வாழையிலைக்குத்தான் நட்டம். முள்ளுப்போய் வாழையிலையில் பட்டாலும் வாழையிலைக்குத் தான் நட்டம். தயவுசெய்து நீங்க போய்விடுங்க. ஆசை காட்டி மோசம் செய்யாதீர்கள்'' என்றாள்.

''என்னத்தைத்தான் சொன்னாலும் விபரீதமாய் விளங்குகிறாயே நாகம்மா! என்றார் ஆசிரியர்.

''பெண்களின் சுவாபமே அப்படித்தான் இதிலும் புருஷனை இழந்த கைம்பெண்கள் எடுத்தற்கெல்லாம் சந்தேகப்படுவார்கள். உபாத்தியாயரே! இதுதான் உண்மை'' என்று ஆறுமுகம் தொடர்ந்து பேசலானார்.

''என்னுடைய மனசில் கல்மிசம் ஒன்றுமில்லை. இது என்னுடைய சொத்தும் அல்ல. இந்த ஆறுயிரம் ரூபாவும் தம்பியினுடையது. அவன் பதினைந்தாவது வயதிலே சுருட்டப் பழகினான். இருபத்தைந்து வயதுவரையும்குடும்பத்தைப் பாதுகாத்தான். நான் அப்போதுதான் சிறிய கடை ஒன்று தொடங்கி இருந்தேன். அதில் வந்த லாபமோ சொற்பம், அதனாலேதான் இவன்ரை உழைப்பில் குடும்பத்தை நடாத்தினோம்.

''அவன் இருபத்தைந்து வயதில் உன்னைக் கலியாணம் செய்தான். ஐந்து வருடம்தான் உன்னோடு சீவியம் நடத்தினான். அதற்குள் அந்தப் பொல்லாத நோய் அவனைப்பற்றிக் கொண்டது. அப்போது நான் உதவிசெய்ய முன் வந்தேன். அவனைக் கூப்பிட்டுக் கேட்டேன்.

''அவன் சொன்னான், 'அண்ணா! இது மாறக்கூடிய நோய் அல்ல. எப்படிச் செலவழித்தாலும் சாவது நிச்சயம். அதற்காக நான் வருந்தவில்லை. என் குழந்தை, அதைப்பற்றித்தான் யோசிக்கிறேன். என் மகனுக்காக உன்னை ஒன்று கேட்கிறேன் செய்கிறீர்களா?' என்று அவன் கேட்டான்.

''நிச்சயம் செய்கிறேன் உன் மகனை என் மகன் போலப் பாவிக்கிறேன். சொல்லு'' என்றேன்.

''நான் இறந்த பின்பு பத்து வருடத்தால் ஆறுயிரம் ரூபா என் மகனுக்குக் கொடுங்கள்'' என்றான் அவன்.

அவன் ஏன் அப்படிக்கேட்கிறான் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை. அவன் முகத்தைப் பார்த்தேன். அவன் சொன்னான். அண்ணா! பத்து வருடம் மாதம் ஐம்பது ரூபாயாக உழைத்துத் தாய் தந்தையரைக் காப்பாற்றினேன். நீ அப்போது ஒன்றும் தரவில்லை. அந்தக் கடமையை நீ என் மகனுக்குச் செய். அது உன் கடமை. நான் செத்த உடன் செய்யாதே. அவன் சும்மா இருந்து சாப்பிடத் தொடங்கினால் இந்த இள வயதில் விபரீத எண்ணங்களில் முனைந்துவிடுவான். பாடுபடவேண்டும். பனியில் நனைந்து, வெயிலில் உலர்ந்து பசியில் வாடவேண்டும். அவள் திட்டுவாள்; பொறுத்துக்கொள். ஊரவர் ஏசுவார் சகித்துக்கொள். ஏன் மாதாமாதம் செய்தால் என்ன என்கிறாயா? ஊரார் நூறு விதம் கதைப்பார்கள். தம்பி பெண்சாதிக்கு அண்ணன் படிசப்பளம் மாதாமாதம் கட்டுகிறானே! காரணம் என்னவாயிருக்கலாம் என்று பழி சுமத்துவார்கள். அதனால்தான் சொல்கிறேன். அண்ணா! அவன் வளரட்டும். படிப்பை நிறுத்திவிடாது பார்த்துக்கொள், பத்தாவது வருடம் கொடு; ஆறுயிரம் ரூபா கொடு' என்றுசொல்லிவிட்டு அவன் போய்விட்டான். ஆம், என் தம்பி என்னைவிட்டுப் போய்விட்டான் என் மனதை இரும்பாக்கிக் கொண்டேன். என் காதைச் செவிடாக்கிக்கொண்டேன். உன் வசைகள் இதயத்தைத் துளைத்தன. ஊர் மொழிகள் காதைக் குடைந்தன. பொறுத்துக்கொண்டேன். எல்லாம் அவனுக்காக. அவன் மகனுக்காக.

''இன்று நீ பேசிய பேச்சைப் பற்றிப்பலர் வந்து சொன்னார்கள். சரி! இனியும் நீடிக்கக்கூடாது. பத்து வருடமும் முடிந்துவிட்டது. என் கடமையும் தீர்ந்துவிட்டது. நாளைக்கு என் வீட்டுக்கு வா, இல்லை உவாத்தியாயர் வீட்டுக்கு வா பணம் தருகிறேன். உனக்கு வாங்கப் பிரியமில்லையோ பொதுவான ஒரு வங்கியிலையோ கோட்டிலையோ கட்டிபோடுவேன்'' என்றார் ஆறுமுகம்

நான்தான் மகனைப் படிப்பிக்க, வளர்க்கப்பாடுபட்டதாக எண்ணியிருந்த நாகம்மா கணவன் தன் நோயையும் பாராமல் செய்த தியாகத்தைக் கேட்டு மகனுக்காக அவர் செய்த முன் ஆயத்தத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டே போனாள். அதனிலும் பார்க்க 'பெரியையா'' ஆறுமுகத்தின் நேர்மை-பொறுமை-பண்பாடு எல்லாம் பணக்கார வர்க்கத்திலும் இப்படி ஒரு மனிதரா?' என்று அவளை எண்ணும்படி செய்தது.

அவள் ஒன்றுமே பேசவில்லை.

''சரி. தேநீர்த் தண்ணீர் வைக்கிறேன் குடித்துவிட்டுப் போங்கள்'' என்றாள் அவள்.

''மகனுக்காகக் குடிக்கிறேன் தா'' என்றார் ஆறுமுகம். ஆசிரியர். மருதப்புவின் எதிர்காலத்தை எண்ணி உள்ளம் குளிர்ந்தார். தட்டி மறைவோடு கேட்டுக்கொண்டு படுத்த மருதப்பு நிம்மதியாகத் தூங்குகிறான்.

அவனுடைய கனவில் கிட்டிபுள்ளுக்குப் பதிலாக, 'கிரிக்கெட்' மட்டையும் பந்தும் மிதக்கின்றன.




# இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டி

## முதல் பரிசு: தங்கப்பதக்கம்

ஒருவர் எத்தனை கதைகளானாலும் அனுப்பலாம்.
கதைகள் சொந்தமானவைகளாக இருத்தல் வேண்டும்.
தேனருவியில் ஆறு பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

## முடிவு திகதி 15-9-62

பரிசு பெறும் கதை நவம்பர் மாத தேனருவியில் பிரசுரிக்கப்படும்.
கதை அனுப்பப்படும் தபாலுறையில் ''இலங்கையர் கோன் நினைவுப் போட்டி'' கதை என்று குறிப்பிடல் வேண்டும்.
போட்டி சம்பந்தமாக எந்தக் கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளப்பட மாட்டாது.

# நிர்க்கதி

"கேசன்"

கடலில் குளித்தெழும்பிய சீதளக்காற்று வீசிக்கொண்டிருந்தது. நிலா நடுவானத்தை எட்டிப்பிடித்துக்கொண்டிருந்தான். உலகமே சந்தடியற்று உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. கடற்கரையை அடுத்துள்ள பகுதிகளில் வாழும் மீனவ சனங்கள் காற்றின் சுகந்த இன்பத்தினால் தாலாட்டப்பட்டு சுகமாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த அர்த்த ராத்திரியிலே கந்தையா உறக்கம் கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் எழுந்துகொண்டிருந்த சிந்தனைகள் அவனை உறங்கவிடாமல் தடுத்தன. கந்தையாவின் உடல் வெம்பியது. அவன் எண்ணங்களும் உணர்ச்சிகளும் வாயினால் வராவிடினும் மனதில் கடந்து சுழன்றன.

"ஐயோ என் ஆசைக் கனவுகள் நிறைவேறுதா? தாயில்லாப் பிள்ளையை ஒரு குறையுமில்லாமல் வளர்த்தேனே. இதுவரை காலமும் அவளை ஒருத்தன் கையில் ஒப்படைக்காதது எவ்வளவு பெரிய தவறு. பொன்னியினுடைய வயதை ஒத்த எத்தனை பெட்டையள் குழந்தையும் கையுமாகத் திரியிருளவை! இவளுக்குத்தான் என்ன குறைச்சல். முந்தின பிறப்பிலே என்ன பாவம் செய்துவிட்டு இஞ்சை வந்து பிறந்தாளோ! பொன்னியோடை விளையாடித் திரிந்த அடுத்த வீட்டு நாகாத்தைக் கிழவியின்ரை பேத்தி முந்த நாள் தன்ரை புரிசனோடை கை கோர்த்துக் கொண்டு வந்தது எனக்கு அந்த நேரத்திலே பொன்னியை நினைக்க எவ்வளவு மனகஷ்டமாக இருந்தது. எனக்கே இவ்வளவு துன்பம் இருந்தெண்டால் பொன்னி அதைக் கண்டிருந்தால் அவள் எவ்வளவு மன வேதனைப்பட்டிருப்பாள் ..... அவளுக்கு கலியாணம் செய்து புரிசனோடை கூடிவாழ ஆசையில்லையா? அதற்கு என்ன செய்வது. எதற்கும் பணம் கையில் இருக்க வேண்டுமே. அந்தளவு காசு உழைக்க எவ்வளவு பாடுபடுகின்றேன். அது முடிகிறதா? என் கவலை தீர வழி? கடவுளே......

கந்தையா வெள்ளைப் பரவைக் கரைகளில் வாழும் மீனவர்களில் ஒருவன். சுருங்கிய சதைகளும் ஒட்டிய கன்னமும் பஞ்சடைந்த கண்களும், நரைத்த தலைமயிரும், மீசையும் அவனை அடையாளம் காட்டிவிடும். 'கந்தையாண்ணை' என்று சொல்லித்தான் அவனை எப்போதும் அழைப்பார்கள். அந்சப் பக்கத்தில் ஏதாவது குழப்பம் நடந்தால் அதைத் தீர்க்க கந்தையாதான் வரவேண்டும். கந்தையா சொல்லுவதை எல்லாரும் தட்டாமல் கேட்பார்கள். நாலு பக்கமும் பனைகளால் சூழப்பட்டு நடுவில் இருக்கும் குடிசைதான் அவனுக்குச் சொந்தமானது. இரண்டு பீற்றல் வலைகளையும் ஓலைப் பறிகளையும் அவன் வீட்டு முற்றத்தில் எப்போதும் காணலாம். இந்தக்காலத்தில் நைலோன் வலை வாங்கி மீன் பிடிக்கிறார்கள் பலர். கந்தையாவுக்கு இவைகளிலெல்லாம் நம்பிக்கை இல்லை. தன் தகப்பன் அந்தக்காலத்தில் அவனுக்குக் கொடுத்த வலையையே அவன் பல வருசங்களாக பாவித்து வருகிறான். பொன்னி கந்தையாவின் மகள். அவன் மனைவி இறந்து பல வருசங்களாகிவிட்டன. பொன்னியை அவன் ஒரு குறையுமில்லாமல் வளர்த்து வருகிறான். அவனுக்கு இப்போது பொன்னிக்கு கலியாணத்தைச் செய்து வைக்க வேண்டிய கவலை ஏற்பட்டது. பொன்னியின் வயதை ஒத்தவர்கள் குழந்தையும் கையுமாகத் திரிகிறபோது அவனுக்குப் பொன்னியை யார் கையிலாவது ஒப்படைக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படாதா? கந்தையாவுக்குச் சொந்தமானது பழைய காலத்து இரண்டு வலைகளும் ஒரு தோணியும்தான். பொன்னியின் திருமணத்தைப் பற்றிப் பேசியபோது சீதனமாக நைலோன்வலை வாங்கித்தர வேண்டுமென்று முடிவாகச் சொல்லிவிட்டார்கள். அவைகளெல்லாம் கந்தையாவுக்கு விருப்பம் இல்லையென்றாலும் மகளின் கலியாணத்திற்காக நைலோன்வலை வாங்க வேண்டுமே. அதற்காகத் தன் சாப்பாட்டைப் பற்றியே சிந்திக்காமல் மீன் விற்கும் பணத்திலே சிறுகச் சிறுகப் பணம் சேர்த்துக் கொண்டு வருகிறான்.

அன்று இரவு ஊரே நிசப்தத்தில் ஆழ்ந்த பிறகு மகளும் படுக்கைக்குப்போன பிறகு தான்சேர்த்துவைத்த பணத்தை எண்ணிப் பார்த்தான் கந்தையா! அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது! அவன் எதிர் பார்த்ததற்கு இன்னும் கொஞ்சக் காசு போட்டால் நைலோன் வலையும் வாங்கி மிச்சமும் ரொக்கமாகக் கொடுக்கலாம்.

காசை எண்ணிப் பார்த்த பிறகு கந்தையாவுக்குத் தன் மகளின் கலியாணத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரே வெறியாக மாறியது. அவனுக்கு ஏற்பட்ட வெறியால் சாப்பாட்டையும் அதிகமாகக் கவனிப்பதில்லை. அவன் ஒன்றையும் கவனிப்பதில்லை. மீன் நிரம்பப் பிடித்து நிரம்பக் காசுக்கு விற்க வேண்டுமென்ற வெறி அவனை எப்போதும் கடலில் திரியச் செய்தது. கந்தையா எப்பொழுதும் கனவுலகில் சஞ்சரித்தான். தன் கனவு பலிக்குமென்று திடமாக எண்ணினான்.

அன்று வானம் ஒரே மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மீனவர்கள் காலநிலை நல்லாயில்லை என்பதறிந்து கடலுக்குப் போகவில்லை. போனவர்கள் அவசர அவசரமாக கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். அன்று கந்தையாவின் வெறி உச்சநிலையை அடைந்திருந்தது. வலையையும் பறியையும் எடுத்து ஆயத்தமாக வைத்து



விட்டு வீட்டுக்குள் நுழைந்தான், பொன்னி முதல் நாள் அவித்திருந்த ஒடியல்ப்புட்டையும், மீனையும ஒன்றாகக் குழைத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். அவசர அவசரமாக அவைகளைத் தின்றுவிட்டுப் புறப்பட ஆயத்தமானான் கந்தையா.

''அப்பு ஒருத்தரும் கடலுக்குப் போகவில்லை. நீங்களும் பார்த்துப் போங்களன்'' என்று சொன்னாள் பொன்னி.

''நீ சும்மா இரு புள்ளை! அவங்கள் போகாவிட்டால் கிடக்கிறாங்கள் பயந்தவங்கள். மழையையும் காற்றையும் பார்த்தால் காசு எப்படி வரும'' என்று சொல்லிவிட்டு ''நீ ஒன்றுக்கும் பயப்பிடாதை புள்ளை'' என்றபடி வலையை எடுத்து அலட்சியமாகத் தோளில் போட்டுக் கொண்டு புறப்பட்டான். கடற்கரையிலே வள்ளங்கள் வெள்ளைக்கடதாசியிலே கறுத்தக்கோடு ஒன்று வரைந்தது போல நின்று கொண்டிருந்தன. மேகமெல்லாம் இருண்டு கறுத்துக் கொண்டிருந்தது. கந்தையா கனவுலகத்தில் சஞ்சரித்தபடி தாங்குதடியை எடுத்து வள்ளத்தைத் தள்ளிக் கொண்டு கடலில் சென்றான். இயற்கையின் நிலை அவன் சிந்தனைக்கு எட்டவில்லை!

வீட்டிலே பொன்னி தன் தகப்பனுக்குப் புட்டைக் கொடுத்துவிட்டு மிகுதியைத் தானும் தின்றாள். பின் உமலுக்குள் கிடந்த கொஞ்ச அரிசியை எடுத்து அடுப்பில் இருந்த பானையுள் கொட்டிவிட்டு வெளியில் வந்தாள். உலகமே இருண்டு விட்டது போல இருந்தது. தூரத்துப் பொருட்கள் ஒன்றும் தெரியவில்லை. மின்னல் 'பளிச் பளிச்' சென்று ஓயாது மின்னியது. அதைத் தொடர்ந்து காதே செவிடாகும்படியாக இடிமுழக்கம் பரந்தது. பொன்னி கவலையடைந்தாள். தகப்பன் வருகிறானா என்று வெளியே எட்டிப் பார்த்தாள். மழைத்தூறல் அவள் மேனியைக் குளிரச் செய்தது.

கந்தையா வீச்சுவலையை வீசி இழுத்தான். பறியைப்பார்த்தான், அவன் உள்ளம் நிறைந்தது. ''இண்டைக்கு இருபத்தைஞ்சு ரூபாய்க்குப் பிழையில்லை'' என்று அவன் வாய் முணு முணுத்தது. அதற்குப் பின்னும் வீட்டிற்குப் போக மனமில்லாது ஆழ்கடலை நோக்கித் தோணியைச் செலுத்தினான். இன்னும் பெரிய மீன் பிடிக்க வேண்டுமென்ற நப்பாசையுடன்.

மழை 'சட சட' என்று பொழியத் தொடங்கியது. பொன்னிக்குக் கவலை கூடியது, தகப்பனை இன்னும் காணவில்லையே என்று எண்ணும்போது அவளுக்கு அழுகையே வந்து விட்டது மழையும் ஓயக் காணோம், வர வர மழை கூடக் கூடப் பெய்ததே ஒழியக் குறையக் காணோம். பொன்னிக்கு இருப்புக் கொள்ளவில்லை. வீட்டில் கிடந்த பீற்றல் பாய் ஒன்றை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டு கடற்கரையை நோக்கி ஓடினாள்.

கந்தையாவும் மழை பொழியத் தொடங்கிய பின்பு தான் தன் நிலை உணர்ந்து திடுக்கிட்டான். அப்போது அவன் தோணி ஆழ்கடலில் ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தது. அலை குமுறி எழுந்தது. காற்று தோணியை சுழற்றி ஆட்டியது. மழை திக்குத் தெரியாதபடி புகைபோல் பொழிந்து கொண்டிருந்தது. தோணியுள் தண்ணீர் நிரம்பத் தொடங்கியது. தோணியை ஓட்டுவதா அல்லது தண்ணீரை வெளியில் அள்ளி ஊற்றுவதா என்று திகைத்தான் கந்தையா. தோணியும் இதோ கவிழ்கிறேன் என்று பயமுறுத்தியது.



பொன்னி கடற்கரையில் நின்று பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. பேய்க் காற்றுச் சுழன்று சுழன்று அடித்தது. மழை அவள் மேனியை நனைத்தது. அவள் உடைகள் நனைந்து தேகத்துடன் ஒட்டிக் கிடந்து அவள் பருவ அங்கங்களை வெளிக்காட்டியது. அவள் ஏழையென்றாலும் பருவம் அவள் மேனியில் விளையாடி விட்டிருந்தது. மழை இருட்டிலும் பொன்னி கடலைத் துருவித் துருவிப் பார்த்தாள். தகப்பனின் தலைக்கறுப்பே தெரியவில்லை. அவளுக்குச் சிறிது தூரத்தில் நின்ற பனைகளும், பூவரசு மரங்களும் பேய்க்காற்றின் சுழற்சி தாங்காது 'பட பட' வென்று முறிந்து வீழ்ந்தன. 'கூ' வென்ற சப்தம் கேட்டுத் திரும்பினாள் பொன்னி. தன்னை நோக்கிப் பூதம்போல் ஒரு பெரிய மரம் விழுந்து கொண்டிருப்பதைக் கண்டு பீதி அடைந்து ஓடினாள். கல் தடுக்கி விழுந்த அவள் மேல் அந்த மரம் விழுந்து அழுத்தி ...

'ஐயோ! என் பொன்னி! நீ எங்கே! என் கனவு பலிக்குமா? ...ஐயோ நான் கடலிலே சாகிறேன் என் ஆசை எப்படிப் பலிக்கும் கடவுளே!' கந்தையாவின் வாய் அரற்றியது. அவன் கடலுள் அமிழ்ந்து கொண்டிருந்தான். இங்கே பொன்னி கட்டாந்தரையிலே விறைத்துக் கிடந்தாள். ஆகாயத்திலே முகில் ஓடாமல் நிலை குத்தி நின்றது

## காதலிக்கு அனுப்பிய பரிசு

ஓர் இளைஞன் தன் காதலிக்கு அவளின் பிறந்த நாளன்று அவளுக்கு எத்தனை வயதாகிறதோ அத்தனை ரோஜா மலர்களை அனுப்பி வைப்பதாக வாக்களித்தான்.

அதன்படியே பூக்கடைக்காரரிடம் சென்று அவளின் முகவரியைக் கொடுத்து, ''இங்கு இருபது ரோஜா மலர்கள் அனுப்பிவிடு!'' என்று கூறி அதற்கான கட்டணத்தைக் கட்டினான்.

அந்தப் பூக்கடைக்காரருக்கு அவன் ஒரு நல்ல வாடிக்கைக்காரனாகத் தோன்றியது. ''பத்துப் பூ கூடப்போட்டு அனுப்பிவை'' என்று கூறிவிட்டார் தம் ஊழியனிடம். அவனும் அவ்விதமே செய்து விட்டான். வந்ததே ஆபத்து. அவள் காதலைத் துறந்தே விட்டாள்.

# பெண்

"முத்து"

'என்ன இதெல்லாம் ஒரு குமர் பேசுகிற பேச்சா...

செல்வம் தலைக்கு மிஞ்சினால் பேசுகிற பேசாத பேச்சுமா தெரியாது!

மங்களத்துக்குத் தன் மகளின் பிடிவாதம் வேதனையையும்கோபத்தையும் கொடுத்தது. கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள், புவனாவைச் சல்லடை போடுவது போன்று ஊடுருவி நோக்கினாள். எதைத்தான் தேடுகிறாளோ!

'அப்படியெல்லாம் சொல்லக் கூடாது மோனை.'

'கலியாணம் செய்யாமல் எத்தனையோ பேர் வாழவில்லையா அம்மா?'

மகளின் இக்கேள்விக்கு என்ன பதில் கூறுவது முட்டி மோதி வந்த உணர்ச்சியை வார்த்தைகளாக்கத் தெரியவில்லை மங்களத்துக்கு. எந்தக் கடமையை நிறைவேற்றிவிட்டுக் கண்ணை மூடலாம் என்று கடந்த பத்து வருடமாக கணவன் இறந்த பின்பும், வாழாமல் வாழ்ந்துகொண்டிருந்தாளோ அது நிறைவேறாது விடுமோ! மகளைப் பற்றித் தான் கட்டிய கற்பனைக் கோட்டைகள் எல்லாம் இடிந்து சிதைந்து துகள் துகளாக வேண்டியதுதானா?

இதயத்தின் கன்றிய பகுதியிலிருந்து இரத்தம் கசிவது போன்றிருந்தது மங்களத்துக்கு. நெஞ்சை அழுத்திப்பிடித்துக் கொண்டாள். ஆமாம் வாழ்க்கையென்றால் ஆத்மதிருப்திதானே! அது மங்களத்துக்குக் கிடைக்காமலே போய்விடுமோ? இருமிலை விழுங்கித் தொண்டையைச் சரி செய்து கொண்டாள்.

'இப்படிச் சொல்ல உனக்கு மனம் வருதோ' மென்று விழுங்கினாள்.

...

மௌனம்சம்மதத்தின்சாயலோ!

'மாப்பிளைப் பொடியன் உன்னை ஒருக்கால் பார்த்துவிட்டு முடிவு சொல்லிறன் எண்ணுதாம். இது கிட்டத்தட்ட முடிந்த மாதிரித்தான். வெள்ளிக்கிழமை கூட்டி வரச் சொல்லட்டோ' தட்டுத்தடுமாறிச் சொல்லிவிட்டு மகளின் முகத்தை ஆவலோடு பார்த்தாள் பெற்றவள். அந்தக் கண நேரத்தில் இல்லாத பொல்லாத தெய்வங்களையெல்லாம் 'மகளின் மனம் மாறிவிட வேண்டும்' என வேண்டிக் கொண்டாள், ஒரு பெண்ணின் தாம்பத்திய வாழ்வு, கலியாண எழுத்திலோ மாங்கலிய தாரணத்திலோ மலர்வதில்லையென்பது மங்களத்தின் அனுபவரீதியான தத்துவம்.

'ம்! நாலுதரம் பெண் பார்க்க ஏற்பாடு செய்தும் என்ன கண்டாய்? ஒருவருக்குச் சீதனம் காணாது, மற்றவருக்கு நான் அழகாகத் தெரியவில்லை. இன்னொருவருக்கு இங்கிலிஸ் பேசத் தெரிய வேணுமாம். எல்லாரும் வந்து வந்து பார்த்து அபிப்பிராயம் சொல்லிப்போக நான் என்ன காட்சிப் பொருளா அம்மா?

'புவனா'

'வேண்டாமினை. எனக்கு இனிக் கலியாணமே வேண்டாம். தயவு செய்து என்னைத் தொந்தரவு படுத்தாதை.'



புவனாவின் இதயத்தில் குமைந்து கொண்டிருந்த துன்பம் விரக்தி கலந்த வார்த்தைகளாக வெடித்துச் சிதறியது. அந்த விரக்தியின் பிரதிபலிப்பாகப் பொங்கி வந்த கோபத்தை, வேதனையை அடக்க முடியாதவளாக 'விருட்டென்று அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

மங்களத்தின் கண்களிலிருந்து கண்ணீர் குபு குபு என்று கொட்டியது. அவளை அறியாமலே அவள் கைகள் முருகன் படத்தை நோக்கிக் கூப்பியது.

வெளிவிருந்தையில் போட்டிருந்த கதிரையில் வந்திருந்த புவனாவுக்கு உலகத்திலுள்ள துன்பமெல்லாம் தன்னை வந்தடைந்தது போன்று இருந்தது. 'என்ன மனிதர்கள் இவர்கள்! சமூகமாம் சமூகம் மண்ணாங்கட்டி! இதயம் அது யாருக்கு வேண்டிக்கிடக்கிறது இந்தக் காலத்தில்! பொன்னும் பொருளும் இருந்து விட்டால்..' விண்டு வெடித்தது புவனாவின் உள்ளம்.

வெளியே வெறித்துப் பார்த்தாள். பங்குனி மாத வெயில் காண்டாவனமாக எரிந்து கொண்டிருந்தது.

மனத்தில் மாத்திரமா புழுக்கம் வெளியிலும் ஒரே புழுக்கமாக இருந்தது. பக்கத்து மாமரத்தில் காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. அது அவளுக்குச் சோக கீதம் பாடுவதுபோன்று இருந்தது.

'படப்படப்' எனச் சிறகடிக்கும் சத்தம் புவனாவின் கவனத்தைக் கவர்ந்தது. சிட்டுக்குருவியொன்று விட்டு வளையில் வந்து அமர்ந்து' கிறிச்...கிறிச் என்று குரல் கொடுத்த வண்ணம் அங்குமிங்கும் பார்த்துக் கத்தியது.

தன்னால் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று தன்னையே கேட்டுக்கொண்டாள் புவனா.

அடுத்த கணம் கிர்ர் படப்பட ...படப்பட சோடி. இராமபாணம் போன்று வந்து குதித்தது. பெடையை நாடித் தாவியது. செத்திச் செந்தி இலாவகமாக விலகி விடுகிறதே பெடை.

கோபமா? நாணமா? அன்றி ஊடலா?

புவனாவுக்கு என்னவோபோல இருந்தது. வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நெஞ்சின் அடித்தளத்திலிருந்து இனம் தெரியாத ஒருவகை இன்பம் சுரப்பது போன்று இருந்தது. காற்று வீசாதபோதிலும குளு குளுவென்று இருந்தது.

சிட்டுக்குருவிகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று அருகருகாக உரசிக் கொண்டு ..

புவனாவுக்குத் தேகம் எல்லாம் புல்லரித்தது. ஒரு கணம் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டாள். யாராவது பார்த்து விட்டால் தன்னைப் பற்றித் தப்பாக எண்ணி விடுவார்கள் என்ற பயம்போலும்! நெஞ்சு திக் திக் என்று அடித்துக் கொண்டது.

பெடைக்குக் கோதி விடுகிறதே சிட்டு!

தனது தலையை யாரோ கோதி விடுவது போன்ற பிரமையாக இருந்தது. புவனா கூனிக் குறுகிக் கொண்டாள். கூச்சம் அவளைப் பிடுங்கித் தின்றது. உறங்கிக் கிடந்த உணர்ச்சிகள் விழித்துக் கொண்டனவா? புவனா காதைத் தீட்டி வைத்துக் கொண்டாள். அவை சுவாசிப்பதையும் கேட்டு விடவேண்டும் என்ற தவிப்பு! கிரிக் கிரிக்...சிட்டுக்களும் காதல் மொழி பேசுகின்றனவா?

கிரிச்ச்...சிட்டுக்கள் வெளியே பறந்து மறைந்தன. ஆகாயத்திலிருந்து தள்ளிவிடப்பட்டவளுக்கு ஏற்படும் திகைப்பும் பயமும் புவ

னாவிடம் வந்து குடிபுகுந்தன. வேதனை இதயத்தைப் பிழிந்தது. எல்லாம் ஒரே சூனியமாகக் காட்சியளித்தன. சிலையாக இருந்தாள்.

'என்ன கடும் யோசனைபோல' என்று கேட்டுக் கொண்டு வந்தாள் உமா. புவனாவின் பாலிய சினேகிதி. உமாவின் குரல் புவனாவைச் சுயநினைவுக்குக் கொண்டு வந்து விட்டதுமல்லாமல் ஒரு கணம் அதிரவும் வைத்தது. வெயர்த்துக் கொட்டியதோடு நெஞ்சு திக் திக் என அடித்துக் கொண்டிருந்தது. சில கணங்கள் அவளால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

'என்னடி பயந்துவிட்டாயா? பேந்தப் பேந்த முழிக்கிறாயே' உரிமையோடு கேட்டாள் உமா.

ம் ம் . வந்து வந்து... என்னமோ...

ஏதோ மென்று விழுங்கினாள்.

'கொம்மா இல்லையோ'

'இருக்கிறா'

'என்னடி தனியஇருந்து யோசிக்கிறே'

'யோசிக்கிறேனா சிட்டுகளையல்லோ பார்த்துக் கொண்டிருந்தேன்'

'எங்கேடி சிட்டு?'

'அவை பறந்து .....விட்டன'— அழாக்குறையாகக் கூறினாள்.

'ம்.. வருங்காலத்தை எண்ணிப் பறந்தாயாக்கும்'

'போடி உனக்குக் கேலிதான். ஏன் இந்தப் பக்கத்திலே காணவில்லை' கதையை வேறு திசைக்கு மாற்றினாள்.

'எங்கேடி நேரம். அதையிதை செய்யப் பொழுது போய் விடுகிறது. இரண்டு மூன்று நாளாய் இவருக்கும் சுகமில்லை. பிள்ளைக்கு வேறு கிரந்தியெண்ணை கொடுக்கிறேன். இன்றைக்கு இங்கு வருவதற்கு, நீ நம்பமாட்டாய்' மூன்று நாள் கட்டிய பயணம். வீடு ஏதோ பக்கத்திலைதான் கையொழிந்தால் தானே'

'ஏன்டி அவருக்கு என்ன வருத்தம்'

'தடிமனும் காய்ச்சலும்'

'ஓ உதுக்கா நான் என்னவோ ஏதோ '

'ம் உனக்கு ஒருவர் வந்து அவருக்கு ஒன்று வரும்போது ...அப்போ கேட்டுக் கொள்ளுகிறேன்.

'புவனாவுக்கு என்னவோபோல இருந்தது.'

உனக்குத் தெரியாது, ஆம்பிளையளுக்கு வருத்தம் வந்தால் எந்த நேரமும் அவர்களுக்குப் பக்கத்திலை நாங்கள் நிற்க வேண்டும் என்பது அவர்கள் உள் அவா அதை அவர்கள் சொல்ல மாட்டார்கள். ஆனால் எந்த நேரமும் இதை மனதில் வைத்துக் கொண்டு சினந்து விழுவார்கள். இதற்கு மேலாகக் 'கண்டதைக் கடியதை' சாப்பிட்டு வருத்தத்தையும் கூட்டிக் கொள்வார்கள்.

'ஆமா நீ எப்படித்தான் சமாளிக்கிறாயோ?' ஆவல் துடித்தது வார்த்தைகளில்,

'தெரியாதே ஒரு மாதிரி ..'

'தெரியாதபடியால்தானே கேட்கிறேன். நீ என்னென்றால் தெரியாதை ஒரு மாதிரியென்று மழுப்புகிறாயே'

'மதம்பிடித்த யானையைத் துறட்டியால் அடக்குவதுபோன்று ஆண்களை அடக்குவதற்குப் பெண்களிடம் அன்புத்துறட்டி யிருக்கிறதடி. அன்புத்துறட்டி' பெருமை பீறியது வார்த்தைகளில்,

புவனா கண்களை அகல விரித்துக் கொண்டு சிலையாக இருந்தாள். அதாவது அன்பிக்குத் தோற்றுப் போக வேண்டும் என்று சொல்லுகிறாளோ?



உமாவின் குழந்தை புவனாவின் முந்தானையைத் தனது பிஞ்சுக் கையால் பற்றி இழுத்தது. புவனா குழந்தையை வாங்கித் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். குழந்தையின் தளிர் மேனியைத் தடவிக் கொடுத்தாள். அந்த ஸ்பரிச உணர்ச்சி புவனாவை எங்கு எங்கோ கொண்டு சென்றது. என்ன நினைத்தாளோ அப்படியே அள்ளி அன்பு முத்திரை மாறி மாறிக் கொடுத்தாள். ஏங்கும் இதயத்தோடு, பழையபடியும், குழந்தையை இறுக அணைத்துக் கொண்டாள்.

'கொம்மாவுக்கு எப்படி ஒரு பேரனைப் பெத்துக் கொடுக்கப் போகிறாய்' உமா கண்களைச் சிமிட்டினாள் ஏழு வயதுச் சிறுமி போல.

இந்த வார்த்தைகள் ஒரு கணம் புவனாவின் ஊனினை உருக்கி ஒரு வகை ஆனந்தத்தைக் கொடுத்தது. பால் சுரக்கும் தாய்க்கு ஏற்படுகிற இன்பம் இப்படித்தான் இருக்குமோ . அடுத்த கணம் ஒரே வெட்கமாக உமாவை ஏறிட்டுப் பார்க்கவே கூச்சமாக இருந்தது. இப்படி ஏதாவது பேசிக்கொண்டிருந்தாளென்றால் என்ற விருப்பு. ஒருவகைத் தவிப்பு.

'பொறு' புவனாவின் வாயை அமர்த்துவது போன்று கூறினாள் உமா.

'ஓ அம்மாதான் இவர் கூப்பிட்டிருக்க வேண்டும் வரட்டுமா' திடுமென எழுந்தாள்.

'தேவி வா ' கையைத்தட்டி புவனாவின் அணைப்பிலிருந்த குழந்தையின் கவனத்தை ஈர்த்தாள், குழந்தை ஒலி வந்த இடத்தைத் திரும்பிப் பார்த்துச் சிரித்தது.

'மாமியோடை அப்ப இருக்கப் போறியோ '

'இஞ்சார் அம்மாவைப்பார்' குதலைமொழி பயின்றாள் உமா.

குழந்தையை அணைத்திருந்த கைகளைச் சிறிது சோரவிட்டு' அம்மாவைப் பாருங்கோ' என்றாள் புவனா.

தாயின் நீட்டிய கரங்களுக்கு அகப்படாது தாவுவது போன்று புவனாவோடு ஒட்டிக் கொண்டது குழந்தை. அப்படியே மார்போடு இறுக்க அணைத்துக் கொண்டாள். பெருமை பொங்கி வழிந்தது புவனாவின் முகத்தில். இருக்காதா என்ன!

நு நு வா வா...... கைகளை நீட்டிக் குழந்தையை வேண்டினாள் உமா.

'அம்மாவோடு போட்டு இன்னொரு நாளைக்கு வாடா கண்ணு' குரலில் பாசம் இழையோடிருந்தது.

தாயும் பிள்ளையும் கண்களிலிருந்து மறையும்வரை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள் புவனா. கணத்துக்குக்கணம் நெஞ்சில் பாரம் ஏறுவதுபோன்று இருந்தது அவளுக்கு. உஸ்ணமான பெருமூச்சு ஒன்றை வெளியே தள்ளினாள்.

சிட்டுக்குருவிகள் ஏற்படுத்திய சலனத்தைப் பேரலையாக்கி விட்டுப் போகிறாளோ உமா!

இதயத்தின் அடித்தளத்தில் எங்கோ ஒரு கோடியில் துணை வேண்டிக் கூவுவது போன்ற ஒரு பிரமை. கைகளை நெஞ்சோடு கட்டிக் கொண்டு, அப்படியே கதிரையோடு சுவரில் சாய்ந்து கொண்டாள். எல்லாமே சூனியமாக இருந்தது.

கால் அரவம் கேட்டுத் திரும்பினாள். மங்களம் வாசலை மறைத்துத் தொங்கிக் கொண்டிருக்கும் திரைச் சேலையை இருகைகளாலும் ஒதுக்கிக் கொண்டு வருவது தெரிந்தது.

'வெள்ளிக்கிழமை தையல் வகுப்பிருக்கல்லோம்மா' என்றாள் வெட்கம் முகத்தில் கப்பிக் கொள்ள.

# சாராயம்

கா. சதாசிவம்

நீண்டு உயர்ந்த பனைமரங்கள் அப்பனைமரங்களின் கீழ் பத்துப் பன்னிரண்டு மாட்டுத் தொழுவத்தைப் போன்ற வட்டமான குடிசைகள். அக்குடிசையின் நாலுபுறமும் தட்டிகளால் அடைக்கப்பட்டிருந்தன. பனைகள் நெருக்கமாக நின்ற அப்பகுதிக்குப் பனங்காடு என்ற பெயர் பொருத்தமாக இருக்கத்தான் செய்தது. வானம் இருண்டு வையத்தை இருட் போர்வையில் அமுக்கியிருந்த நேரம். குப்பனின் குடிசையில் இருந்த குப்பி விளக்கு குடிசையில் இருந்த இருளைக் கவ்விக் கொண்டிருந்தது. நீண்ட பேய்க் காற்றடிக்கும் போதெல்லாம் அக்குப்பி விளக்கு வலியிழந்து காற்றடிக்கும் பக்கம் சரிந்து எரியும்.

அன்று பெய்த மழையினல் நிலம் ஒரே சேறு இருந்தது. நிலத்தினுள் இருக்கும் பூச்சி புழுக்கள் 'கிர் கிர்' என்ற ஒருவித பயங்கர ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன. பேரிரைச்சலோடு ஒரு பேய்க் காற்று— பனைகளில் இருந்த காவோலைகள் பனைமரங்களோடு உராய்ந்து '':சோ'' என்ற ஒருவித பயங்கர ஒலியை எழுப்பிக்கொண்டிருந்தன.

குப்பனுக்கு ஒரேயொரு மகனும் ஒரேயொரு மனைவியும். (சிலருக்கு இரு மனைவிகளும் உளர்) அம்மூன்று ஜீவனும் அக்குடிசையில் காலம் கழித்தனர். பனங்காட்டில் குப்பன்தான் அரசன். அரசன் என்ருல் அவன் சர்வாதிகாரத்தனமானவனல்லன். பனங்காட்டில் உள்ளவர்கள் வேண்டும் போது அவனிடம்தான் ஆலோசனை கேட்பார்கள், குப்பனின் கையில்தான் பனங்காடு என்றே சொல்லிவிடலாம். குப்பன் ஒரு ''படிக்காதமேதை'', ''தெய்வப் பிறவி.''

அன்று மத்தியானம் காய்ச்சிய கஞ்சியில் எஞ்சியிருந்ததை அம்மூன்று ஜீவனும் குடித்துக் கால் வயிற்றை நிரப்பிவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தனர்.

சுமார் 11 மணியிருக்கும்.

முற்றத்தில் படுத்திருந்த நாய் ''வெவ் வெவ்'' என்று குரைக்க ஆரம்பித்தது. அதையடுத்து அயல் குடிசைகளில் நின்ற நாய்களும் சேர்ந்து ஊளையிட்டுப் பனங்காட்டைப்பயங்கரக்காடாக்கிக் கொண்டிருந்தன. குப்பனுக்குத் தன் தூக்கத்தைக் கலைத்ததற்காக நாய்கள்மேல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பக்கத்தில் இருந்த திட்டுக் கட்டையைக் கையில் எடுத்தான். தூங்கிக் கொண்டிருந்த குப்பி விளக்கை விளிக்கச் செய்து கையில் எடுத்துக் கொண்டு முற்றத்தை நோக்கி நடந்தான். எலலா நாய்களும் ஒரே திசையை நோக்கிக் குரைத்துக் கொண்டிருந்தன குப்பனின் தடிக்கு அவைகள் பயந்ததாகவே தெரியவில்லை. யாரோ நிற்கிறுர்கள் என்பது குப்பனுக்கு விளங்கி விட்டது.

நாய்கள் குரைத்த பக்கம் கண்ணேட்டம் விட்டான். 'ஒரு ரோச் லைட்' ஒளி அதையடுத்து இருகுரல்கள் குசுகுசுத்த சத்தம்.

அவ்வொலி குப்பனை நோக்கி வந்து கொண்டிருந்தது. குப்பன் கையிலிருந்த குப்பி விளக்கை அவர்களின் முகத்திற்கு நேரே பிடித்துப் பார்த்தான்.

ஒரு உருவத்தின் கையில் ஒரு ''ரோச் லைட்'', மற்றைய உருவத்தின் கையில் ஒரு ஓலைப்பை.

''உதாருது?'' குப்பன் கேட்டான்.

''அது நாங்கள் ஆறுமுகமும், சின்னத்தம்பியும்'' இப்பதில் ஒருவத்தன் வாயிலிருந்து புறப்பட்டது.

''ஏது இந்த நேரத்திலே?

''இல்லைக் கண்டியோ! நான் எலக்சன் கேக்கிறனல்லே. அதுதான் உன்னையும் கண்டுகொண்டு போவமெண்டு வந்தனுங்கள்.'' என்ருர் ஆறுமுகம்.

''என்னை என்ன காணுகிறது? அதுதான் உங்களுக்குத தெரியுமே''

''சாச்சா அப்படி சொல்லாதே பிறகு நீ கோவிப்பா என்று சின்னத்தம்பி சொல்லிச்சுது பின்னைத்தான் '' இது ஆறுமுகம்.

''குப்பர்! பனங்காட்டிலை இருக்கிற பத்துப் பன்னிரண்டு குடியையும் எங்க பக்கம் திருப்பிப் போட்டாக்காணும்.'' இது சின்னத்தம்பியின் ''அட்வைஸ்''

''கபக்காறன்! என்னைப்பற்றி உங்களுக்கு விளங்கேல்லை.

அதுதான் உப்பிடிப்பேசிறியள். உங்களைப்போல ஏழை எளியதுகளுக்காக ஆர்பாடுபடுகினமோ அவையளுக்குத்தான் எங்கடை வோட்டு.''

''ஏன் நான் ஏழை எளியதுக்காக பாடுபடேல்லையே. சாதி ஒழிய வேணுமெண்டு நான் பாடுபடேல்லையே?''

''கமக்காறன்! எனக்குத்தெரியாதெண்டு நாம் படிப்பிக்க வேண்டாம். நான் படிச்சது ஆறுந்சாந்தான். இப்ப சீவல்தொழில செய்யிறன். கமக்காறன் நாம் இதைக் கேட்க ''

''அது கிடக்கட்டும் ''

''சாச்சா! இது முக்கியமாக நீங்கள் கேக்கவேணும்''

''என்னது?''

''போன வரியம் அம்மன் கோவில்லை ஒருநாள் திருவிழா நடந்திது''.

''ஓ! எங்கடை 8ம் திருவிழாவோ?''

''ஓமோம்! பின்னை என்ரை சின்னவன் திருவிழாப் பார்க்க வேணுமெண்டு தொந்தரவு குடுத்தபடி பின்னை கூட்டிக் கொண்டு போனேன், வெளிமண்டபத்திலை தான் சின்னமேளம் நடந்தது. நல்ல சனம். கொஞ்ச நேரத்தாலை மழையல்லோ பிடிச்சுது ஒருபிடி. பின்னை நின்ட சனமெல்லாம் ''கூகா குளங்கரை எண்டு குளறிக் கொண்டு மடத்துக்குள்ளையும், கோயிலுக்குள்ளையுமாக ஒடி ஒதுங்கிக் கொண்டுதுகள். இதுக்குள்ளை என்ர சின்னவனைக் கைநழுவ விட்டிட்டன். பின்னை தேடடாகூடித் தேடித் தேடிப்பாத்தன். காணேல்லை. பத்துப் பதினைஞ்சு நிமிஷம் தேடியிருப்பன். ஒரு இடத்திலை ஒரெ கூட்டமாயிருந்தது. எட்டிப் பாக்கேலாமல் காதைக் குடுத்துக் கேட்டேன் என்ன நடக்குதெண்டு.

''கோயிலுக்குள்ளை வந்திட்டியோடா கீழ்சாதிப் பயலே. அவற்ரை கோலத்தின்ரை திறத்திலை வந்திட்டராம் உள்ளுக்கு பள்ளிக்கு இவ்வளவு நடப்போ? பிச்சை தின்கிற கீழ்சாதிப்பயல்!'' சனத்தை விலத்திக் கொண்டு எட்டிப் பாத்தன். பாத்தது தான் தாமதம். ஓடிப்போய் என்ரை சின்னவனை அப்பிடியே தூக்கி எடுத்தன். வாய்க்குள்ளாலை இரத்தம் வந்தது நிமிந்து பாத்தன். வண்டியோடை ஒருவர் நின்டார். அவர் ஆர் தெரியுமே ஆறுமுகத்தின் தலை கீழ்நோக்கியது.

''அப்ப சொன்னியள் பிச்சை கேட்டுத் திரியிற கீழ்ச்சாதிப் பயலெண்டு, இப்ப என்னட்டை வோட்டுப் பிச்சை கேக்க வாறி

யளே. உங்களுக்கு வெக்கம் ரோசம் இருக்கே," சாதி ஒழிய வேணுமெண்டு இப்பிடித்தானே பாடுபடப்போறியள்.

''குப்பர்! அதை மறந்துபோ! இந்தா! இதுக்குள்ளை ஐஞ்சுபோத்தல் இருக்கு. இதை வைச்சுக் கொள்.'' பையைக் குப்பனிடம் நீட்டினார் ஆறுமுகம்.

''சாராயத்தைக் குடுத்துச் சமாதானம் பிடிக்கலாமெண்டு நினைக்கிறியளே! அதிலை வேலையில்லை. சாராயத்துக்கு வோட்டுப் போடுற சாதியில்லை நாங்கள். எங்கடை சாதிக்காகப் பாடுபடுகிறவனுக்குத்தான் வோட்டு. சாராயத்தைக் குடுத்து வோட்டு வாங்க வேறையேன் பாருங்காகா! குப்பன் ஆவேசமாகப் பேசினான்.

''குப்பர்! சில சிறிசுகள் இப்ப இருக்குதுகள். சாதி சாதி எண்டு சொல்லி வோட்டு வாங்கிறவை. அவை கடைசியிலை ''

''கமக்காறன்! அவையளைப் பேசாதேங்கோ. அவங்கள் சொன்னாலும் செய்வாங்கள். ஆனால் நீங்கள் சாதிஒழிய வேணுமெண்டு சொல்லுவியள். ஆனால் கோயிலுக்குப் போனா அதையேன், உங்களுக்குத் தெரிஞ்ச விஷயம் தானே. கடைசியாகச் சொல்லிறண ஏன் மினைக்கடுறியள். அதிலை வேலையில்லை.''

இருவரும் தலையைத் தொங்கப் போட்டபடி வந்தவழியே திரும்பினர். நீண்ட ஒரு பெய்க்காற்றடித்தது. குப்பி விளக்கு அணைந்தது. குப்பனும் குடிசைக்குள் நுழைந்தான். நாய்கள் எல்லாம் சேர்ந்து ஊளையிட்டுப் பனங்காட்டைப் பயங்கரக் காடாக்கிக் கொண்டிருந்தன.

## சொர்க்கத்தில் . . .

### தமிழரசு வன்னியசிங்கமும், கொம்யூனிஸ்ட் கந்தையாவும் சந்தித்தால்

அமரர்களான வன்னியசிங்கமும், கந்தையாவும் சொர்க்கத்தில் ஒருவரை ஒருவர் சந்தித்து, இருவரும் மனம்விட்டுக் கலந்துரையாடியதாக கற்பனை பண்ணி கட்டுரை எழுதப்படல் வேண்டும்.

**முடிவு திகதி 10-8-62.**

**பரிசு பெறும் கட்டுரை செப்டம்பர் இதழில் இடம் பெறும்.**

**பரிசு ரூபா 10.**

# சுடலை ஞானம்

(முத்துராசன்)

மாதம்பிட்டி மையவாடியின் மூலையில் நிற்கிறேன். உயிரற்ற - அறிவற்ற உடலுக்கு இறுதி மரியாதை என்ற போர்வையில உயிரும் அறிவும் (?) உள்ள உடல்கள் குழுமி நிற்கின்றன.

ஜீவன் பிரிந்து, உணர்விழந்து வெறும் கூடான பின்தான், கூட்டிற்குள்ளிருந்த ஒளியின் ஜோதி வெள்ளத்தைக் காண்கிறது மனித விட்டில். ஏலவே கண்டுவிட்டால் தான் என்ன வாழும்? அதிலேயே மூழ்கிவிடுமா?

அவன் தன்னைப் 'பிரம்மா' என்றதைப் பேத்தித்திரிகிறான் என்றதும் இக்கூட்டம்தான். இப்பொழுது, உள்ளடங்கிய வஸ்துவை அறியாது மயங்கி, வெளிப்புறக் கோடுக[illegible]த் துறந்த பின்பே வஸ்துவைத் தரிசிக்கிறது. மங்கிய நிலவொளியில் தூரத்தே நிற்கும் உருவத்திற்குப் போய் தலைதாழ்த்துகிறது.

எது முக்கியம்?

உள்ளடங்கிய வஸ்துவா?

வெளிப்புறக் கோடுகளா?

எது சாஸ்வதம்?

இதோ, எத்தனையோ பேரைப் படைத்து உலவவிட்ட 'பிரம்மா'வின் சடலம். சடலம்தான் 'பிரம்மா'வினுடைய தென்றால்—அப்பிரம்மா? அதுதான் ஆன்மாவா? ஆன்மா உடலை ஆள்வதா? உடல் ஆன்மாவை ஆள்வதா?

ஆத்மாதான் இப்பொய்யுடலை ஆளவேண்டும். ஆன்மாவின் புனித கிரியைகள் பூர்த்தியாவதற்கே மெய் ஒரு சாதனம். அல்லாமல் தனது விஷ இச்சைகளுக்காக ஆன்மாவைப் புறக்கணிப்பதற்கல்ல. மூன்று கை மண்ணை அள்ளிப் போட்டுவிட்டு அங்கிருந்த 'பைப்'பை நோக்கி நடக்கிறேன்.

'ஹா ஐயோ அம்மா, வேதனை தாளமுடியவில்லையே ... அப்பா '

ஏன்தான் அந்த வேசி அங்கு வந்தாளோ? வந்ததுதான் வந்தாள். ஒரு முழத்துண்டோடா வரவேண்டும்? என்றாவது ஒருநாள் மண்ணிற்குள் போகும் சரீரம் தண்ணீர் பட்டு ஜொலித்தது.

நான் பார்க்கிறேன்.

என்பார்வை பட்டாலே ஒரு பெண் மூன்று மாதக் கர்ப்பிணியாகி விடுவாளாம். இப்படி விமர்சித்த நண்பன் மண்ணிற்குள் போய்விட்டான். அவனுடலில் மூன்றுபிடி மண்ணைத் தூவிய நான் பழகிபடிந்த கையை அவள்முன் நீட்டுகிறேன்.

நீரை ஊற்றிக் கொண்டே கதைக்கிறாள்.

'ஐயா, அங்கிட்டு சோப்பும் இருக்குது, எடுத்துத் தேய்ச்சுக் கொள்ளுங்க.'

'... ... ... ...'

'சும்மா தேய்ச்சுக் கொள்ளுங்க ஐயா. மண்ணு தின்கிறதை மனுசன் தின்னா என்ன?'

ஆமாம்—அமாம் மண் தின்பதை மனிதன் தின்றால் என்ன?

எனக்குள்ளிருந்து யாருடைய குரலோ எழுந்தது.

சோப்பை எடுத்துப் பூசிக் கொண்டே அவளை நோக்குகிறேன்

'ஐயோ அம்மா விண் விண் என்று குத்தலெடுக்கிறதே தாங்க முடியவில்லையே அம் மா'

அவளுடைய முகவிலாசம் யாருடையதைப் போலும் தெரியவில்லை. ஒருவேளை அவள் தாயைப் போல இருக்கலாம்.

வாலிப்பான உடலும், உயர்ந்த தோற்றமும்

மிஸ். மனோ! ஆபிஸில் என்னருகிருந்த வண்ணமே என்னைத் தவிக்க வைக்கிறாயே. உன்னையே ஞாபகமூட்டுகின்றன.

'ஆயா' அடுத்த பங்களாவில் நீ வேலையா செய்கிறாய்? அடிக்கடி என் பார்வையில் தென்பட்டு மூச்சை உள்வாங்கி — மார்பை நிமிர்த்தி என்னைக் கொல்லாமல் கொல்லும் உன்னையே இங்குகாண்கிறேன்.

அந்தப் பறங்கிச்சியின் நான் அலுவலகத்திலிருந்து வரும் பொழுது என்முன்னால் ஒயிலாகச் செல்லும் அவளின் பிடிப்பான கவுனுக்குள் ஏறி இறங்கும் பிருஷ்டபாகங்கள் அம்மணமாகின்றன.

கையில் 'சோப்' நுரைத்து வழிகிறது.

இவ்வளவு பேரின் அம்சங்களும் ஒருங்கமையப் பெற்ற இவள், அவர்களிடம் இல்லாத தாராள மனமும் அல்லவா கொண்டிருக்கிறாள்.

'மண் தின்பதை மனிதன் தின்றால் 'என்ன' எத்தகைய பரந்த எண்ணம்.

உடல் ஆன்மாவை ஆளத் தொடங்கிவிட்டது. அதன் விஷ இச்சைக்காக ஆன்மா புறக்கணிக்கப்பட்டது.

'ஐயா, கையைக் கழுவிக் கொள்ளுங்க. உங்களை யாரோ கூப்புடுறாங்க,'

பின்னால் என்னுடன் வந்த சிநேகிதன் பல்லை இளிக்கிறான். அவசரம் அவசரமாக அலம்பிக் கொண்டு அவனைத் தொடர்ந்தேன்.

ஃ

'உடம்பெல்லாம் அசதியாக இருக்கிறது. ஆபீஸ்விட்டதும் ரூமிற்குக்கூடப் போகாமல்நேராக வந்தது. நீண்ட சவ ஊர்வலத்தில் எவ்வளவு தூரம் நடந்திருக்கிறோம்? இப்படியே பாலத்துறைப் பக்கம் போய் வந்தால் மேல் அலுப்பெல்லாம் தீர்ந்துவிடும் - என்ன சொல்கிறாய்?'

சரியான சந்தர்ப்பத்தில் சரியான யோசனையைச் சொன்னான் என் சிநேகிதன். எனக்கு அவனை விட இரண்டு மடங்கு நிலை. உள்ளமும் அப்படித்தான். உடலும் அப்படித்தான். எங்கேயோ ஆரம்பமாகி எங்கேயோவந்து நிற்கிறேன்.

பாலத்துறையில் ஒரு கள்ளுக் கொட்டில். களனியாற்றின் ஊத்தை நீரின் மேல் ஒருகாலும், கரையில் ஒரு காலுமாக அமைந்திருந்தது. போத்தல்கள் காலியாக ஆக காஷ்மீர் நகரிலுள்ள நதியில் மிதக்கும் அலங்கரிக்கப்பட்ட படகுபோல தோன்றியது அக்கொட்டில். அப்பொழுது சுடச்சுட ஆப்பங்களைத் தூக்கிக் கொண்டு அந்த அப்ஸரஸ் வந்தாள்.

'அடடா நீங்க இங்கேயா இருக்கீங்க. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல'

ஒருவகையில் அவளின் பக்தன் தானே நான்?

'நீங்களா ? அங்க அடக்கம் முடிஞ்சதும் இங்க வந்து அடஞ்சிட்டீங்களா?'

'ஆமாம் வேறென்ன செய்ய?' உங்க ஆப்பத்தை இப்படித்தாங்க

போதையில் வார்த்தை சிலேடையாக விழுகிறது.

'சும்மா இருங்க ஐயா. கடைக்காரரு பாப்பாரு.'



'பார்த்தாத்தான் என்ன? மண் தின்றதை மனிதன் தின்கிறான்.'

அப்பொழுது அவள் முகத்தில் கோலமிட்ட புன்னகையை என்னவென்பது?

மணியும் ஏழரைக்கு மேலிருக்கும். அநேகமாகக் கள்ளுக் கொட்டில்கள் மூடப்படும்நேரம். அந்தக்கொட்டிலில் இருந்த இரண்டொருவரும் சென்று விட்டனர். நானும் என் நண்பனும் 'தண்ணி'யில் மிதந்தோம். என் சிநேகிதன் கெட்டிக்காரன். கடைக்காரனையும் சேர்த்துக் கொண்டான். எங்கெங்கோ இருந்து வந்த மூவரும் ஒரே சகோதரர்களாகிவிட்டோம். இன்னும் இருவர் கலந்தால் பஞ்சபாண்டவர் தான் அந்தத் திரௌபதி கடைப் பலகையை ஒவ்வொன்றாக எடுத்து மூடினாள்.

'சிம்னி' விளக்கின் ஒளி அறையில் கப்பியிருந்த இருளை விழுங்கியதா? இருள்தான் அந்த ஒளியை விழுங்கியதா? ஒன்றும் புரியாத மாயையில் இழந்திருந்தது அறை.

நண்பன் வாசற் பலகைகளில் ஒன்றை நீக்கிக்கொண்டு வெளியே சென்றான். நான் சட்டைப்பொத்தான்களை மாட்டிக்கொண்டிருந்தேன். அக்கடைக்காரனா? கணவனா? அவன் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தான். கன்னங்களில் 'கோலவ் காய்ந்து கிடந்தது. அவளோ எவ்வித சலனமுமின்றி குழந்தையைப் போல எழுந்து நின்றாள். என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, கால்களை விறைப்பதாக ஊன்றி, கைகளை மேலே உயர்த்தி சோம்பல் முறித்தாள். அத்திரௌபதியின் துகில் கீழே உரிந்து கிடந்தது.

எச்சிலூறச் செய்த பதார்த்தங்களை ருசித்தபின், இனி ஏன் எச்சில் ஊறப்போகிறது? மனிதமனம் விசித்திரமானது. அடிக்கடி நிறம் மாறும் பச்சோந்தியைப் போலவும் மாறுகிறது. கிளைக்குக் கிளை தாவும் மந்தியைப் போலவும் மாறுகிறது. அப்படியானால் சர்வ ஜீவராசிகளின் கூட்டுக்கலவை தான் மனிதமனமோ?

நானும் நடையிறங்கினேன்.

''ஐயோ குத்துதே வலிக்குதே அம் மா தாங்கமுடியவில்லையே, நர்ஸ்! நர்ஸ்!' ஓடி வாங்களேன்.''

அங்கிருந்து புறப்பட்ட நான் இங்குவந்து சேர்ந்துவிட்டேன்.

அப்பொழுது சொர்க்கத்தின் நுழைவாசல் என்றுதான் பட்டது.

யாருக்குத் தெரியும் நரக படுகுழியை? நல்ல வேளை என் நண்பனாவது தப்பினானே?

இன்றோடு இந்த வார்டில் இரண்டு படுக்கைகள் காலியாகிவிட்டன. வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்காவது பயன்பட்டார்கள்.

நான் ?

நேற்று என்னோடு கதைத்துக் கொண்டிருந்தவரை இன்று அணைத்துக்கொண்ட மரணம், ஏன் என்னை நோக்கி வரவில்லை? அதற்கும் இவ்வுடலின் நாற்ற சகவாசம் பிடிக்கவில்லையே?

ஆன்மாவை அலட்சியம் செய்த உடலைவிட்டு அவ்வான்மா கூட பிரியவில்லையே? நியதிக்குக் கட்டுப்பட்ட ஆன்மாவைப் போல இவ்வுடலையும் கட்டியிருந்தால்

அவள் மண்ணிற்கே உரியவள். மண்ணிற்குரியவளை என்னுடைமையாக்கினேன். ஒன்றிற்குரிய ஒன்றை மற்றொன்று கவர்வது முறையா?

முறையற்ற செய்கையால் வேதனைத் தீயில் புழுவாய்த் துடிக்கிறேன். உன்னுடைமையாக்கிக் கொள்.

மண் தின்பதை மனிதன் தின்றதினால் அம்மனிதனை மண் தின்று தீர்க்காதா?

''ஐயோ அம் மா வலிக்குதே தாங்க முடியவில்லையே தாயே அய் யோ... குத் துதே''

முருகையன் மஹாகவி இருவரும் சேர்ந்து
படைக்கும் குறுங்காப்பியம்

# தகனம்

முருகையன்

## முதலாம் இயல்

### சதுரங்கம்

தூய தான துரிய நிலையிலே
சுத்த மாயையின் உட்புறம் நின்று தன்
தீயெழுந்து சுடர்விரி மேனியின்
சிந்தும் வேர்வை துடைத்து நிமிர்ந்தனன்.
காய நின்று கனன்ற நுதல்விழி
கங்கை நீர்த்துளித் தூறல் குளிர்த்திட
வாய் திறந்தொரு கோரச் சிரிப்பினை
வாரி வீசி மலர்க்கரம் கொட்டினான்.

கேட்க யாரும் இருந்திலர்; அன்னவன்
கேண்மை பூண்டஅப் பச்சைச் சிறுமியும்
தாட்சி லம்பை வணங்கி நிமிர்ந்தவள்
தானும் அன்னவன் பாகியாய் ஒன்றினாள்.
ஆட்சி செய்து பழக்கமே யாயினும்
'ஆள ஒன்றுமே இல்லை!' எனும்தனி
மாட்சி சான்ற நிலைஅது; ஊழிகள்
வந்து கூடிய மையக் கணம் அது.

அண்ட கோடி அனைத்தும் ஒடுங்கிய
அந்த வேளை! அதற்குச் சிறிதுமுன்
சண்ட கோர அழிப்பு வெறியொடும்
சங்க ரித்த சமயத்து. நாள்களோ
துண்ட மாயின; தூள் துகளாயின.
துகள் தகர்ந்து துகட்டுகள் ஆயின
கண்ட நீலன் கருதிடு முன்னரே
கால சூத்திரக் கட்டும் அறுந்தது.

தூம கேதுகள் தொய்ந்த தலையொடும்
சூல பாணியை நோக்கி நெருங்கின
காம வேளும் கமலக் கடவுளும்
கண்ணன், இந்திரன் என்பவர் தொட்டுள
யாவ ரும்துறந் தார்உடல்; யாவையும்
ஈசன் பாதத்தில் எய்தி அடங்கின
பூமி கள்பல கோடி அந்தமாய்ப்
போய் அடைந்து சரணம் புகுந்தன.

கோர மாகச் சிரித்த சிரிப்பிலே
குலை நடுங்கி எவரும் விழுந்திலர்,
யாரும் எஞ்சி இருந்தில ராதலால்!
இந்த வேளையில் வெண்ணிலா வேணியன்
பார்வை காலடி மீது விழுந்தது
பற்ப லப்பல கோடி உலகமும்
சார வந்தொரு சிற்றணு வாகிய
தன்மை கண்டு கரத்தில எடுத்தனன்.

நெற்றிக் கண்ணைத் திறந்தவன் பார்வையால்
நீறு பட்டதச் சிற்றணு; நீற்றினைச்
சற்று நேரம் கவனித்துப் பார்த்தபின்
சடையி லேஅதைச் சூட்டி, வெறுமையின்
முற்றெ னும்தனிச் சூனிய மத்தியில்
முறுவ லோடொரு நாட்டிய மாடினான்
'வெற்றி என்ன? வெறிஎன்ன?' என்றொரு
மென்மை யான குரலொலி கேட்டது.

பச்சை மாது மரமனின் பாதியாம்
பழைமை மாறி இறங்கி நடந்தனள்
கச்சு விம்ம வளர்ந்தன மார்பகம்
கண்ணு தல்விழிப் பார்வையின் சூக்கும
இச்சை செய்த இடக்கின் விளைவுதான்!!
இனிய பாலும் சுரந்து வழிந்தது
நச்செ றிந்தொரு பார்வையை எய்தவள்
நானி லங்கள் படைத்திட வேண்டினாள்.

விம்மி நின்றபிரணவம் 'ஓம்' என
விந்தை நாதம் எழுப்பும் உடுக்கையின்
செம்மை யான ஒலிப்பில் எழுந்ததும்
திக்கி னோடு திகந்தமும் தோன்றின
அம்மை சிந்தை களித்து நகைக்கிறாள்
அந்த இன்னொலிச் சின்னக் குமிழிகள்
உம்மென் றாதி உருண்டு திரண்டன
உடுக்க ளாகி வெறுவெளிச் சென்றன.

பரம சைவத்தி பாட்டொன்று பாடினாள்
பார் பலப்பல தோன்றிப் பரந்தன
பிரம ரென்பவர் பின்னர் பிறந்துதம்
பெரிய வேலைகள் செய்யத் தொடங்கினர்
'அரி' எனும்பெய ரோடு கரத்திலே
ஆழி பற்றித் தொழில்செய்ய முந்தினார்
பரப ரப்புடன் பற்பலர்; ஆங்கொரு
பாறை மீதிலே பார்வதி குந்தினாள்

ஆதிக் காதலன் அம்மையை நோக்கினான்
'ஆன்ம கோடிகள் ஆதர வின்றியே
வாத னைப்படு கின்றனர்; ஆதலால்
மற்ற வர்க்கும் உடல்தர வேண்டுமே!'
ஓதினான் உமை; ஓம் என்று சொன்னதும்
உலகம் எங்கும் உடல்கள் அசைந்தன
'போதுமா?' என்று கேட்க அக்கன்னியோ
'போங்கள்!' என்று நிலத்தினை நோக்கினாள்

சென்று கையினைப் பற்றினான் சங்கரன்;
செந்த ழல்திற மேனி வியர்வையால்
அன்று வெம்மையும் ஈரமும் ஆனதை
அறிந்து சேலையால் ஒற்றத் தொடங்கினாள்
நன்றி நின்ற முகத்தொடு நோக்கினான்.
நம்பன். அப்பிர தேசம் குளிர்ந்தது!
குன்றி ருந்து குளிர்புனல் பாய்ந்தது
கொள்ளை இன்பக் குலாவல் நிகழ்ந்தது!!

பனி படர்ந்து பருத்த கொடுமுடிப்
பாங்க ரெங்கும் ஒளிவள வெண்மையே.
கனிவு பொங்க உடல்சிலிர்க் கின்றதோர்
கால கோலம்; அதனிடை ஆயிழை
இனிமை பொங்க எடுத்த குரலிலே
ஈசன் சொக்கினான்; சொக்கனே ஆயினான்!!
கனி இரண்டவள் வாய்; அதனால் அவை
கணவ மூலவன் உண்ணுதல் எண்ணினான்.

வேட்கை கொண்டவன் போல அணைந்தனன்
வேய் பதுங்க மிளிர்ந்திடு தோளினாள்
'ஆட்ப டும்சுவை ஆர விரும்பினாள்
ஆ'மெ னும்படி ஆட்பட லாயினாள்.
நாட்கள் போயின; நாழிகை போயின
நாய கற்குப் புதிய சுவைதரும்
சூழ்ச்சி ஒன்று தொடங்கினாள் மாயவள்.
சூது நோக்கி எழுந்து நடந்தனள்.

கொண்டு வந்து பலகையை வைத்தவள்
குழைந்து நின்று சதுரங்க மாடிட
அண்டர் கோனை அழைத்தனள்; அன்னவன்
அதற் கிசையவும் சூது தொடங்கினார்.
கெண்டை நோக்கி இடையிடை வென்றனள்.
கேலி செய்து தலைவனைத் தூண்டவும்
பண்டை ஞான் இடையிடை வென்றனன்.
'பார்வதி!' என மூரல் முகிழ்த்தனன்.

'எங்கள் மைந்தர்கள் என்ன நிலைமையில்
இருக்கிறார்களோ?' என்றனள் பார்வதி.
கொங்கை என்ற குவட்டின் தழுவபினைக்
கொண்டி ருக்கும் பழக்க முடையவன்
அங்க லாய்த்த அவளைவிட் டப்புறம்
அகன்று கொஞ்சம் விலகி அமர்ந்தனன்.
மங்கை அன்பொடு மக்களை நோக்கினாள்
மக்கள் செய்கையின் உட்கிடை பார்க்கிறாள்.

(தொடரும்)

# இயக்கமும் இலக்கியமும்

(கா. சிவத்தம்பி)

## முன்னுரை

(மனித உணர்வினையும் அறிவினையும் காட்டுவது இலக்கியம் அறிவு சிந்தனையால் வருவது. சிந்தனை காலத்தின் தேவைகளால் தோன்றுவது. எனவே இலக்கியம் காலத்தின் பண்புகளையும் காலத்தின் தேவைகளையும் மனித நிலையில் நின்று வெளியிடுவதாகும்.

இலக்கியத்தின் வரலாறு இவ்வுண்மையைக் காட்டுகின்றது, இலக்கிய வரலாற்றில் மனித சிந்தனைகள், அச்சிந்தனைகளை எடுத்துச் சொல்வதில் உள்ள முறைகள் மரபுகள் முதலியனவற்றை மாத்திரமல்லாது, இலக்கியம் மனித முன்னேற்றத்திற்கும் சமுதாய அமைப்பு மாற்றத்திற்கும் எவ்வாறு பாவிக்கப்பட்டுள்ளது என்பதையும் நாம் காணமுடியும். உலக இலக்கிய வரலாறுகூறும் உண்மை இது.

வாழ்க்கையைக் காட்டும் இலக்கியம் வாழ வழியையும் காட்டுகின்றது. வாழ வழிகாட்டும் இலக்கியம், இருக்கும் வாழ்க்கையைக் காட்டி செல்லவேண்டிய வழியைக்காட்டி அவ்வழியின் அத்தியாவசியத்தை உணர்த்துகின்றது இலக்கியம் உணர்வுவழி கடமையாற்றும் சமுதாய சக்தியாக மாறிவிடுகின்றது)

ஒவ்வொரு காலப்பிரிவிலும் இலக்கியம் இவ்வாறு ஆக்க சக்தியாக அமைவதை நாம் காணலாம். 'நலமாகப்பாடிப் பொரை விடுக'என்ற சங்ககாலப் புலவன் முதல், சமுதாய வாழ்விற்கு வழிவகுத்த வள்ளுவர் உள்ளிட்டு, பக்திப் பாடல்என்ற உருவில் பஞ்ச ஒழிப்பிற்காகப் பாடிய திருநாவுக்கரசர் வரை எல்லோருமே இலக்கியத்தின் ஆக்க சக்தியினை உணர்ந்து அதனைப் பயன்படுத்தியுள்ளனர். சமுதாயத்தினடியாகப் பிறந்து, சமுதாயத்தையே வழிநடத்த உதவும் இலக்கியம் இருக்கும் நிலையையும் முன்னேற்றத்திற்கான இயக்க நிலையையும் காட்டுகின்றது. அது தோன்றும்பொழுது, சமூகம்இருக்கும் நிலையைக் காட்டவேண்டுமென்ற உணர்வுடன் தோற்றுவிக்கப்படுவதில்லை. நிலைமை இவ்வாறிருந்தால் இத்தகைய தீமைகள்தான் விளையும் என்பதைக் காட்டுவதற்காகவும், இவ்வாறிருப்பதைவிட்டு முன்னேறிச் செல்லுவோம் என்று அறை கூவுவதாகவும், எவ்வாறு இம்முன்னேற்றப் பாதை அமையுமென்பதைக் காட்டுவதாகவும் இலக்கியம் தோன்றும். இவை பற்றிய கருத்து வேறுபாடுகள் இலக்கியத்திற் காணப்படின், அம்மக்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன என்பதே கருத்து. எனவே சமுதாயத்தில் தோன்றிய இயக்கங்களின் வெளிப்பாடாக இலக்கியம் அமைவதை நாம் காண்கிறோம். நேரடியாகவும், எதிர் மறையாகவும் இந்நிலைமை இலக்கியத்தில் எடுத்தியம்பப்படலாம்,

இனி, இலக்கியம் தோன்றுகின்ற பொழுது அது கருத்துப் பரிவர்த்தனைக்காக தோன்றுகின்றதென்பது தெரியவரும். ஒவ்வொருவரும் தனது கருத்தினை தமது ஆக்கத்தின் மூலம் எடுத்தியம்புகின்றனர். இருக்கின்ற ஒரு கருத்தினை ஏற்றோ, அல்லது அதனை எதிர்த்தோ தமது எண்ணத்தினைத் தமது ஆக்கங்கள் மூலம் சொல்கின்றனர். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது முதல் "நபவழி நல்வழி" என்பது வரை இவ்வுண்மையே பரிணமிப்பதை நாம் காணலாம். எனவே, யாரோ ஒருவருக்குத் தமது கருத்தினைத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் இலக்கிய கர்த்தாவிடம் அவனறியாமலே உண்டு. தான் விரும்பும் 'தாக்கம் ஏற்பட வேண்டுமென்பதற்காக எத்தனையோ உத்திகளைக் கையாண்டு எழுதுகின்றான். இருக்கின்ற

முறைப்படியே சொல்லிமுடித்தல், புதிய வழிவகைகள் மூலம் சொல்லுதல் என அவன் தனது ஆக்கத்தின் வடிவத்தையும் அவன் தீர்மானித்துக் கொள்கிறான். இலக்கியத்தில் தோன்றும் உருவமாற்றங்களை அறியமுனையும் எவரும் இவ்வுண்மையை அறியாரேல் யாப்பெனும் வெறுங் காடு காவல் கொண்டவராகவே விளங்குவர்: உருவத்தை விட்டு நிழலைபிடிக்க முனைந்தவராவர்.

இலக்கியத்தின் தோற்றம் பற்றிய இவ்வடிப்படை உண்மையை நாம் உணர்ந்து கொண்டோமானால் இலக்கியத்தை உணர்ந்தவர்களாவோம்.

தமிழ் இலக்கியத்தினை இக்கண்ணோட்டத்திற் பார்த்தல் அவசியம் தமிழகத்திலும், தமிழர் வாழ்விலும் இலக்கியம் எவ்வாறு சமூகத்தின் விளைபொருளாகத் தோன்றிற்று என்பதையும் சமூக நிலையைப்பேணவும், மாற்றவும் எவ்வாறு இலக்கியத்தைப் பாவித்தனர் என்பதையும், தமிழ் நாட்டினுள் காலங்காலமாக இருந்துவரும் உள் போராட்டத்தினை எவ்வாறு இலக்கியம் காட்டுகின்றது என்பதையும் நாம் அறிதல் அவசியம்.

தமிழிலக்கிய வரலாற்று நூல்களை எழுதியவர்களும், ஆராய்ச்சி செய்தவர்களும் இவ்வாறான கண்ணோட்டத்திற்கு வேண்டிய ஆதாரப்பொருளான வரலாற்றுண்மைகளை எமக்குத்தந்துள்ளனர். அவர்களது பேருழைப்பின் காரணமாகவே எமக்கு இன்று பல நூல்கள் கிடைத்துள்ளன. தமிழிலக்கியங்கள் யாவற்றையும் ஒன்றுசேர்த்து அவை ஒவ்வொன்றினது பண்புகளையும் விரித்துப் பின்னர் கால முறைப்படி வகுத்துத்தந்துள்ளனர் அந்த வரலாற்றடிப்படையில் நாம் நமது கருத்தின் உண்மையைக்காணலாம். எம் எஸ். பூரணலிங்கம் பிள்ளை, கா. சுப்ரமணிய பிள்ளை. எஸ். வையாபுரிப்பிள்ளை வி. செல்வநாயகம், ஜேசுதாசன் முதலியோர் தக்க இலக்கிய வரலாற்றினைத் தந்துள்ளனர், சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப் பிள்ளை, சோமசுந்தர பாரதியார், கே என். சிவராஜபிள்ளை, மு. ராகவையங்கார், ரா. ராகவையங்கார், சுவாமி விபுலானந்தர், எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், டி. வி. சதாசிவ பண்டாரத்தார், கே. ஆர். கோபாலன். வி. மீனாக்ஷி, டி. வி. மகாலிங்கம், ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், தெ. பொ. மீனாக்ஷி சுந்தரம், கே. கே. பிள்ளை, மு. ஆரோக்கியசாமி, க. கணபதிப் பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், காமிஸ் ஸ்வெலபில், கால்டுவெல், சங்கரன், இராசமாணிக்கம்' சிதம்பரநாதன் செட்டியார் முதலியோர் ஆராய்ச்சிகள் மூலம் பல இலக்கிய வரலாற்றிற்கு வேண்டிய உண்மைகளை எடுத்து விளக்கியுள்ளனர்,

தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சியில், இவ்வாறு இலக்கியத்தை வரலாற்றுடனும், அவ்வக் காலப்பிரச்னைகளுடனும் தொடர்புறுத்திப் பார்க்கும் பண்பு இப்பொழுது வளர்ந்து வருவதை நாம் காணலாம். முதலில் இலக்கிய வரலாற்றுக்கான காலப் பிரிவுகள் பேரிலக்கியங்களின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டு வந்தன. சிலப்பதிகாரகாலம், தேவாரகாலம், காப்பியகாலம் எனவே முன்பு வழங்குவர். ஆனால் இப்பொழுது, பல்லவர் காலம், சோழர் காலம், விசய நகர நாயக்க மன்னர் காலமென வரலாற்றடிப்படையில் காலப்பிரிவுகளை வகுத்துள்ளனர். வரலாற்று முறைப்படி அறிந்து இலக்கியத்திற்கும் வாழ்விற்குமுள்ள தொடர்பினை வீழ்க்கும் பணியில் இன்று பலர் ஊக்கமுடன் உழைக்கின்றனர் அவ்வாறான ஓர் கருத்தின் 'இலக்கியமாகவே' இக்கட்டுரைத் தொடர் அமையும்.

**(அடுத்த இதழில் சங்க காலம்)**

# “புறோக்கர் பூலோகம்”

“சானா”

'புறோக்கர்' பூலோகம் ஒரு புனிதமான ஆள். ஆனால் புழுகன். இவர் சிங்கப்பூரில பிறந்தவர். அதனால்தான் புழுகுவதில் புகழ் பெற்றவர் என்று எங்கள் ஊரில் பேசிக்கொள்வர் சிலர். இதுதான் தகுந்த காரணம் என்பது கருத்தல்ல நிற்க, இவரது தந்தை பரமசிவம், சிங்கப்பூரில் புகையிரதப் பகுதியில் கடமையாற்றியபடியால், சிங்கப்பூரில் பிறக்கும் பாக்கியம் கிடைத்தது பூலோகத்திற்கு. அதனால பூலோகம் புழுகுவதற்குக் காரணகர்த்தா இவரது தந்தை பரமசிவம் என்பது என் அபிப்பிராயம். (ஒப்புக்கொள்கிறீர்களா? மிகவும் நன்றி.)

பூலோகம் இளையவர். இவரது தமையன் பெயர் புவிலிங்கம். பெயரைச் சுருக்கி பி. பீ. லிங்ஹாம் என்று அழைத்துக்கொண்டார் கொழும்பு வைத்தியர் கல்லூரியில் படிக்கும்பொழுது. இப்பொழுது இவர் டொக்டர் பி. பி. லிங்ஹாமாக இருக்கிறார். லிங்ஹாமும் பூலோகமும்தான் பரமசிவம் பெற்ற இரு செல்வங்கள். பூலோகம் பிறந்த பதின்மூன்றாம் நாள், தாயார், அதாவது பரமசிவத்தின் ஆருயிர்த் துணைவி, பரலோகம் சேர்ந்துவிட்டார். சிங்கப்பூர் சீமையை ஜப்பான் படையெடுக்க, சிங்கப்பூரில் இருந்து வெற்றிகரமாகப் பின்வாங்கி யாழ்ப்பாணம் திரும்பிய பேறு பெற்றவர்கள் இந்த மும்மூர்த்திகள். பரமசிவத்திற்குச் கிங்கப்பூர் ''பென்ஷன்.'' லிங்ஹாம் கொழும்பு வைத்தியக் கல்லூரியில் சேர்ந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியொன்றில் பூலோகம் படித்துவந்தார். இற்றைக்கு இருபத்திமூன்று வருஷங்களுக்கு முன் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

பிற்காலத்தில் பூலோகம் ஒரு ''புறோக்க''ராக வருவாரென்று, கல்லூரியில் படிக்குங் காலங்களிலேயே ஒரு அறிகுறி தென்பட்டது, சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொலச் சொல்லை வெல்லுஞ் சொல்லின்மை யறிந்து;'' என்ற வள்ளுவர் வாக்கியத்தைப் பூலோகம் நன்கு கடைபிடித்ததால் தான், இந்தத் தரகுத் தன்மை செவ்வெனத் துலங்கியது இவரில். படிக்குங் காலங்களிலேயே தரகுத் தொழிலிலும் இறங்கிவிட்டார். அதாவது சில்லறைத் தரகு தொழில் தான். தொழில் நுட்பக் கல்வியறிவைப் பெறும் பூலோகத்திற்கு வகுப்பாசிரியர் விதந்தியா விஷயத்தில் கவனம் செலுத்தவில்லை ஏன் வகுப்பாசிரியர் கூட சிலசமயங்களில், பூலோகத்திற்கு. தொழில் நுட்பங்களில் சித்தியடைதற்தகுரிய சில சந்தர்பபங்களை வெகு பக்குவமாகப் பயிற்சியளித்து வந்தார். இது தவறென்று சிலர் சொல்லலாம், ஆனால் ஆராய்ந்து பார்த்தால், இந்த வகுப்பாசிரியரிடம் கல்வி பயிலவிட்ட பரமசிவத்தின் தவறென்று தான் நான் சொல்வேன். (என்ன, நான் சொல்வது சரிதானே?)

பூலோகம் பிற்காலத்தில் 'புறோக்கர்' ஆக வருவதற்கு, தமிழணங்கு பெற்ற தவப்புதல்வர் திருவள்ளுவர் கூறியபடி வெல்லுஞ் சொல்லாகிய, புழுகுந்தன்மை பேருதவி செய்தது. ஆகையால் இவர் சொன்ன ஒரு புழுகை இங்கு சொல்லி, அவரது பேராற்றலை விளக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

சிங்கப்பூரில் இருந்த காலத்தில் பூலோகத்தின் தந்தை, அதாவது பரமசிவம், வேட்டையாடுவதில் மிகவும் விருப்புடையவராக இருந்தாராம், இப்பொழுது இருக்கும் துப்பாக்கிகள் போல அந்தக் காலத்தில் இல்லை. சக்கை அடித்துச் சுடும் துப்பாக்கி, அதாவது சிறுசிறு குண்டுகள், கண்ணாடித் துண்டுகள் போன்ற சில அபாயகரமான அதிவிசாரணிகளுடன் கடதாசித் துண்டுகள், கிழிந்த துணிகள் போன்ற சில அற்ப பொருட்களையும் துப்பாக்கிக் குழாய்க்குள் செலுத்தி. நீண்ட கம்பி ஒன்றால் இறுக இடித்தடித்து, துப்பாக்கியிலுள்ள வில்லைப்பொறிக்க, குழாய்க்குள் இறுகப்பெற்றிருந்த சக்கை திரவியம் குழாய்க்குள் இருந்து வெளிக்கிளம்பி, இலக்கறிந்து நோக்கப்பட்ட வஸ்துவில் (இதில் வஸ்து என்று சொல்வது ஏனென்றால், நோக்கப்படும் பொருள் உயிருள்ளதாகவும் இருக்கலாம் உயிரில்லாததாகவும் இருக்கலாம் என்பதற்காகவே) பட்டு அதைச் சேதமடையச் செய்யும், சக்தியுடைய ஒருவகைத் தளவாடம், (நீண்ட வசன மூலமாகத்தான் இதை உங்களுக்கு விளங்கவைக்க என்னால் முடிந்ததற்கு மன்னிக்கவேண்டும்) இவ்வகையான துப்பாக்கியைக் கையிலேந்தி. ஓரிரு நண்பர்களுடன் ஞாயிறு காலையில் அடர்ந்த காடில்லாத புல் வெளிப் பிரதேசங்களுக்குச் செல்வர். அங்கு சிறுசிறு புற்பற்றைகளுக்குள் முயல்கள் ஒழிந்திருக்கும், அந்தப் பற்றையை இலக்காக அமைத்து, சக்கையிடப்பட்ட துப்பாக்கியை நீட்டி, வில்லைப் பொறித்தார். மாண்டது முயல். அதே நேரத்தில் பற்றைக்குள் பதுங்கியிருந்த வேறு பல முயல்கள் வேட்டின் அதிர்ச்சியால் வெருண்டோடின. பார்த்தார் பரமசிவம். துப்பாக்கிக்குச் சக்கையிட பல மணிநேரம் பிடிக்கும். வேறொன்றும் செய்வதற்கில்லை. மாண்ட முயலைத் தூக்கி, ஓடிய கூட்டத்திற்குள் எறிந்தார். இறந்த முயலுக்குள் இருந்த குண்டுகள் சிதறி இன்னும் மூன்று முயல்கள் விழுந்தன. (இவற்றை வெகு விரைவாக வாசித்தாற்றான் உணர்ச்சி வசப்படலாம்) என்று பூலோகம் சொல்வார். (இது பரம்பரை பரம்பரையாக வந்த வம்சப் புழுகு என்பதே என் அபிப்பிராயம்.)

இவ்வகையாக, இல்லாததொன்றை உண்டென்று சொல்லி வந்த பூலோகம், கல்லூரி வாழ்க்கையை ஏழாவது வகுப்போடு விடுத்து, ஊரில் தரகு வேலையில் மேலும் பயிற்சிபெற்று, இலங்கையின் தலைநகரான கொழும்புக்குவந்து தமையன் டொக்டர் பி. பி லிங்ஹாமின் பராமரிப்பில் வசித்துவந்தார். ஒரு வைத்தியரின் பராமரிப்பில் இன்னொருவன் வாழ்வதென்றால் எவ்வளவு சௌக்கியமாக வாழலாம் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

தொழில் ஒன்றும் இல்லாதிருந்தாலும் தரகுத் தொழிலின் பிரியத்தினால் உந்தப்பட்டவராகையினால். வீட்டில் அடைந்திருப்பதை விரும்பாது காலையிலும் மாலையிலும் வீதி வழியே செல்லத் தொடங்கினார். பேச்சு வன்மையிருந்தபடியால் பெரிய இடத்துச் சிநேகிதம் கிடைத்தது (இதில் பெரிய என்பது, காற்சட்டை, கோட் அணிந்து திரிவதற்குகந்த அடைமொழி என்பதைக் கருத்திற் கொள்க.) பூலோகமும் இத்தகைய; நண்பர்களுடன் சேர்ந்து ''புரோக்கர்'' தொழிலில் மேலும் அனுபவம் பெற்றுவந்தார். பூலோகத்தைத் தெரிந்தவர்கள் யாராவது, ''என்ன தொழில் தம்பி செய்யுறீர்'' என்று கேட்டால் அதற்கு பூலோகம் அளிக்கும் பதில் ''புரோக்கர்' என்பது தான்.

இப்படியாக 'புரோக்கர்' பேர் பெற்ற பூலோகம் உண்மையிலேயே 'பெரும் புரோக்கர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது கொழும்பு ஏழில், (கொழும்பு ஏழுதான் அந்தக் காலத்து புரோக்கர்கள் வாழ்ந்து வங்கிரோத்தாகி பழம் பெரும் பெயருடன் வாழ்ந்த ஸ்தலம்) வீடும் வளவும் வாங்கி, கொழும்பு ஏழுப் பெண்மணியைச் சைவ முறைப்படி தாலிகட்டி, வங்கிரோத்தாகப் போகும் காலத்தை எதிர்பார்த்தபடியே பெரும் சீமானாய் வாழ்ந்து வருகிறார். 'புரோக்கர்' பூலோகத்தின் தமையன் டொக்டர் பி.பி. லிங்ஹாமும் அவரது மனைவியும் (இவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிட்டவில்லை) வாழ்ந்து வருகிறார்கள்.

டொக்டர் பி. பி. லிங்ஹாம் இப்பொழுது அரசாங்கத்தை விட்டு விலகி, பிரத்தியேக வைத்தியசாலை என்னும் பேரில் ஒரு மருந்துக்கடை வைத்திருக்கிறார் 'புரோக்கர் பூலோகம், டொக்டர் பி, பி. லிங்ஹாமின் வைத்தியசாலை புரோக்கராக இருக்கிறாரோ என்று நீங்கள் ஒருவேளை என்னைக் கேட்கலாம். ஆனால் அதைப்பற்றி எனக்குத் தெரியாது. அறிய வேண்டுமென்றால் கொழும்பு ஏழிலுள்ள மாக்காதி வீதிக்குப் போங்கள், வீட்டு இலக்கம் (தயவு செய்து இதை மட்டும் சொல்ல மாட்டேன்).



# வாழ்த்துகிறோம்

சென்ற மாதம் முதற்பகுதியில், ஈழத்தின் பல பாகங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்துவந்த சென்னை அட்வகேட்டும்—பிரபல வர்த்தக ஸ்தாபனமாகிய கொழும்பு, சென்னை ''களஞ்சியம் பிரதர்ஸ்'' பங்காளியுமாகிய — இராமநாதபுரம் ஜில்லா கீழக்கரையைச் சேர்ந்த உயர்திரு **பி. எஸ். ஈ. முகம்மது இப்ராஹிம்** அவர்கள் 11-6-62ல் தனது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு மேற்படிப்பிற்காக 17-6-62ந் தேதி மாலை சென்னையிலிருந்து புறப்படும் பி. ஓ. ஏ. சி. விமானமூலம் இங்கிலாந்து சென்றார்கள். அன்னாருக்கு ''தேனருவி'' வாசகர்கள் சார்பாக எங்களது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவர் செல்லும் பாதையிலே வெற்றி மலர்களைத் தூவி புகழ்மணம் பரப்பும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனைக் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களான நல்லவன் வாழ்வான, ஒரே இனம், தீ போன்ற நூல்களில், படித்து சுவைத்த நூல்களில், ஒன்றைப்பற்றி ஓர் விமர்சனக் கட்டுரை எழுதியனுப்பும்படி தேனருவி வைகாசி ஊற்றின்மூலம் வாசகர்களைக் கேட்டிருந்தோம், அதற்கிணங்க அதிகமான வாசகர்களிடம் இருந்து கட்டுரைகள் வந்துள்ளன அவற்றுள் ஒருசில கட்டுரைகளே தரமானதாகவும் பிரசுரத்திற்குத் தகுந்ததாகவும் அமைந்துள்ளன அவைகளில் முதலாவதாக இடம் பெறும் கட்டுரையே இக்கட்டுரையாகும்.

# ''தீ''

கே எஸ். சிவகுமாரன்

எஸ். பொன்னுத்துரை இன்று ஈழத்தில் ஒரு பிரபல எழுத்தாளர். கண்டன விமர்சனத் துறையில் (destructive criticism) முன்னணியில் நிற்பவர். சிருஷ்டி எழுத்தாளர்களுள் தலை சிறந்தவர் இலக்கியப் படைப்பாளியாக இவரை மதிப்பிடுகையில் இவர் ஒரு உருவவாதி (Formist)யாவார், இவர் கையாளும் உள்ளடக்கம் பாலுணர்ச்சி சம்பந்தப்பட்டதாயிருந்தாலும். இவர் அடிப்படையாகக்கொண்ட கருத்துக்கள், தத்துவங்கள் ஒன்றும் தமிழிற்குப் புதிதானதல்ல. ஆனால் அவற்றைக் கூறும் விதத்திலேயே புதுமையுண்டு. உள்ளடக்கப் பிரகரணங்கள் யாவும் திரும்பத் திரும்ப வருபவையாதலால், உருவமாறுதலே, ஒரு படைப்புக்கு மெருகு அளிக்கின்றது என்ற உண்மையை உணர்ந்தவர். பரிசோதனை என்ற பெயரில் பூரண வடிவங்களாக அமையாத இலக்கிய உருவத்தைச் சமைக்க முயன்றிருக்கிறார் இவர், அம்முயற்சிக்காக இவரைப் பாராட்டலாம்.

''தீ'' என்ற நாவலும் உருவ அமைப்பினாலேயே பெரிய பரப்பரப்பை ஏற்படுத்திற்று ''தீ'', ஒரு தத்துவ விசார நாவலோ, பாலுணர்ச்சியின் விளக்கநாவலோ சமூக நாவலோ, வீட்டு நாவலோ, மனோதத்துவ நாவலோ அல்லது வேறு எந்தப் பிரிவுக்குள்ளுமோ அடங்கக்கூடிய நாவலோ அல்ல. ஆனால், ''தீ''யில் மனோதத்துவ, உடலுறவு சம்பந்தமான தத்துவார்த்த, சமூகயதார்த்த சிருங்கார ரஸமான பார்வைகள் உண்டு. இவற்றில் எந்த ஒரு பார்வையுமே, மற்றவற்றைவிட மேலெழுந்து நிற்கவில்லை அதனால் இதனைக் குறிக்கோளில்லாத நாவல் என்றும் சொல்ல நேர்ந்துவிடுகிறது. அதனாலேயே இது நல்ல தமிழ் நாவல்கள் (இலக்கிய ரீதியில்) வரிசையில் இடம் பெறத் தவறிவிடுகிறது.

நாவலாசிரியரின் சொந்த அனுபவங்கள், அபிலாஷைகள், கற்பனைகள், கனவுலக சோபனங்கள் போன்றவற்றின் எழுத்து வடிவப் பதிவாக ''தீ'' அமைந்திருக்கின்றது. அதில் கவிஞனின் கலைப் பாங்கு இருக்கிறது. ஆனால் கொடூரமான துல்லிய யதார்த்தப் பார்வை மெருகில்லாமல் இடையிடையே அப்பப்பட்டு இரசனையை அருவருக்கச் செய்கின்றது. மக்களுக்காக எழுதப்படும் இலக்கியம் மக்களை மேம்படுத்த, நல்வழிப் படுத்த உதவவேண்டுமேயன்றி. வெறுமனே புகைப்படக் கருவி வாக்கில், உலகையும், மக்களையும் படம் பிடித்தால் மட்டும் போதாது. அதிலும், மனித வாழ்க்கையைப் பூரணமாகவே இவர் படம் பிடிக்கிறாரோ என்றால் அதுவும் இல்லை. இக்கதையில் வரும் பாத்திரச் சித்தரிப்பும், சம்பவங்களும், உடலுறவையும், உடலின்ப வேட்கையையுமே சுற்றிச் சுழலுகின்றன. இக்கதையில் சித்தரிக்கப் படும் சம்பவங்கள், உதிரி உதிரியாக, யதார்த்தபூர்வமனவை என்றால், சம்பவத் தொடர்புகள் இயற்கைக்கு முரணானவை எனலாம். அதாவது நிஜவாழ்வில், மக்களிற் பெரும் பாலோர் உடலின்ப அனுபவமே உலக அனுபவம் என்று மயங்கிக்கிடப்பதில்லை. பாத்திரச் சித்தரிப்பும், சம்பவங்களும் உடலின்ப வேட்கையைச் சுற்றிச் சுழன்றாலும். நாவலின் கதைப் பொருள் (Theme) அதுவல்ல என்பதை இங்கு மீண்டும் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

இலக்கிய மதிப்பை இதுபெறத் தவறி விடுகிறது. ''திலகா'' என்ற பாத்திரத் தன்மையைச் சற்று மகோன்னதமாகச் செய்ததினாற் தான், இந்நாவலை - அல்ல இந்த எழுத்துத் தொகுப்பை - முழுமையாகப் படித்து, சுவைக்க முடிகிறது.

சிதம்பர ரகுநாதன் எழுதிய ''கன்னிகா'' ஒரு மனோதத்துவ நாவல்; பருவ சுருதியின் வேட்கையை, யதார்த்த பூர்வமாக, கலைநயமாக. மாசிலா முறையில் விளங்கும் நாவல். இதனுடன் 'தீ'யை ஒப்பிடவே முடியாது. ரகுநாதன் ஈட்டிய இலக்கிய வெற்றியைப் பொன்னுத்துரை தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.

அடுத்ததாக, இதன் 'ஆபாசத் தன்மை'யைப் பார்க்க வேண்டும். தமிழராகிய நாம், தமிழ் சொற்களைக் கூடப் பூரணமாக விளங்கிக் கொள்ளாமல், அனர்த்தங்களை உச்சரித்து விடுகிறோம். ஒரு இலக்கியம், ஆபாச உணர்வுகளைத் தட்டி எழுப்புவதற்காகவே எழுதப்படுமாயின், அது இலக்கியமாகாது. அது ''கஞ்சல்'' ஆக்கமாகும். ''தீ'' என்ற நூலில் அருவருக்கத் தக்க, அல்லது தமிழ் நவீன இலக்கியங்களைப் படித்துப் பழகியோர் மட்டும் அறிந்திராத, நேரடியான வர்ணனைகள் உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ''குழி'' என்ற அதிகாரம் சற்று மிகைப்பட எழுதப்பட்டுள்ளது தான் என்றாலும், நிச்சயமாகத் ''தீ'' ஒரு ஆபாச நாவலல்ல. அதாவது ஆபாச உணர்வையே முதல் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டதல்ல. கதைப் போக்குடன் இவ்விதமான சில பகுதிகள், இலக்கிய நயமாக, வரையப்படின் ஆட்சேபிப்பதற்கில்லை.

சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, கந்தப் புராணம் மற்றும் அருணகிரிநாதர் ராமலிங்க சுவாமிகள், தாயுமானவர் போன்றோரின் படைப்புகள் எல்லாமே ஆபாசம் என்று நாம் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டியது தானே! தள்ளமாட்டோம் நாம்!

நாவல் இலக்கியத்திலே, ஒருஎல்லையைத் தாண்டிவிட்டதாகக் கருதப்படும் ஜேம்ஸ் ஜோய்ஸின் நாவலான ''யூலிஸஸ்'' என்பதில்உள்ள கடைசிப் பகுதிகள். மிருகத்தனமான இச்சையைக் கூடப் பச்சையாகச் சொல்கின்றன. அதனால், அதனை ஒரு ஆபாசமான படைப்பு என்று கூறுவதில்லை. ''சற்றவி சீமாட்டியின் காதலன்'', ''லொலிற்றா'', மற்றும் தொமஸ்மான். ஜீன்போல் சாத்ரே, அல்பேற் கெமு போன்ற எத்தனையோ இலக்கிய ஆசிரியர்கள் எல்லாம் பச்சையாகவே - ஆனால் கலைநயமாக - எழுதியிருக்கின்றனர். ஆனால் பொன்னுத்துரையின் வருணனைகள் சில மெருகில்லாமல் இருக்கின்றன என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் முழுதாக நோக்கும் பொழுது, ''தீ'' ஆபாசப் படைப்பு அல்லவே அல்ல.

''தீ''யிலுள்ள உருவ் அமைப்பையும், உள்ளடக்கம் பற்றிய ஆதாரத்தன்மை (Authenticily) களையும், பொதுநோக்காக அமைந்த, இந்தக் கட்டுரையில் பகுப்பு முறை கொண்டு விமர்சிக்க முடியாது. அதற்குப் பிறிதாகவே ஒரு கட்டுரை எழுத வேண்டும். ஆனால்

தற்காலிகமாக அ. ந. கந்தசாமி, ''வீரகேசரி''யில் எழுதிய விமர்சனத்தை நானும் உள் வாங்கிக் கொள்கிறேன்.

'உருவம்' என்ற பொதுச் சொல் இலக்கியத்தில் பல உட்பிரிவுகளை உள்ளடக்கும். அவற்றுள் கருப்பொருள் (Plot) உத்தி (Technique) மொழிவளம். எழுத்து நடை (Style) குறியீடுகள் (Siymbols) உவமை உருவங்கள் போன்றவை ஒரு சில. பொன்னுத்துரை உருவவாதி என்னும் பொழுது விசேடமாக அவரது எழுத்து நடையையே நான் குறிப்பிடுகிறேன். உருவ அமைப்பினுள்ள இதர பகுதிகளையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும் பொழுது, அவரது உருவ அமைப்பில் சில குறைபாடுகள் உள. அவற்றையெல்லாம் இங்கு நான் விபரிக்கப் போவதில்லை.

அவரது எழுத்து நடை பெரும் பாலும்பிரயாசையாக (laboriously) எழுதப்பட்ட அர்த்த புஷ்டியான நடை, இந்நடையினை அவர் சிருஷ்டித்துறையிலும், கண்டனத் துறையிலும்கையாள்கிறார். ஆனால் ஆக்கப்படைப்புகளிற் சில இடங்களில் இவர் வலிந்து வலிந்து எழுதுவது, இவரது கலைத்தன்மையைக் கெடுத்துவிடுகின்றது. ''தீ''யில் உள்ள இவரது உவமான உவமேயங்கள், சிறப்புடையதாய் அமைந்திருக்கின்றன. உதாரணமாக ''சந்திரனை விழுங்கிய கேதுவைப்போல, முகத்தை அப்படியே அடைந்திருக்கும் அகலிய நயனங்களில், பரிவு நீரோடை சுரந்து நிற்கின்றது. அதன் குளு குளுப்பில் என் உள்ளம் கிளுகிளுக்கிறது'' - எத்தனையோ விதமான அழகிய சொல்லலங்காரங்களில் இதுவும் ஒன்று.

முடிவாக, ''தீ'' ஈழத்து எழுத்துலகில் ஒரு புதுமாதிரியான முயற்சி. ஆனால் தமிழ் இலக்கிய உலகில் அதற்கு இடங் கிடையாது. ''சுவடு'' என்ற சிறுகதையை எழுதி வெற்றியீட்டிய ஆசிரியரே ''தீ''யையும் எழுதியிருக்கிறார். முன்னையதில் கண்ட இலக்கிய இரசனையைப் பின்னையதில் நான் காணவில்லை. ''தீ'' பற்றிய எனது பார்வைதான் முடிந்த முடிபு என்றோ, சரியான பார்வை என்றோ வாசகர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றோ இல்லை. எனது இரஸனையைத் தெரிவித்துள்ளேன். அவ்வளவுதான்!


## வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல்!

வர்த்தகப் பெருமக்களே!

ஈழம், தமிழ்நாடு மட்டுமின்றி, அகிலத்தில் பைந்தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று ஆயிரம் ஆயிரம் உள்ளங்களின் அழியாச் சித்திரமாக அமைந்து விட்டாள் ''தேனருவி'' அவள் வாயிலாக உங்கள் வியாபாரங்களை விளம்பரம் செய்யுங்கள். குறைந்த செலவில் நிறைந்த பயனை அடைவீர்கள்.

விபரங்கட்கு;-

'தேனருவி'

(விளம்பர நிர்வாகி)

31/3 ஹம்டன் ஒழுங்கை.

கொழும்பு—6.


இலக்கியத்துளி

# கலிங்கம் காட்டிய காட்சி

"பூவழகி"

## மறந்தாள் பிழை

''நான் போருக்குப் போகப் போகின்றேன்.'' மனதைக் கல்லாக்கிக்கொண்டு கூறினான் அவன். அதைக் கேட்ட அவள் துடித்தாள். போருக்கா? அவனைப் பிரிவதா? அவளால் துக்கத்தை அடக்கமுடியவில்லை கண்கள் கலங்கின. அவளது நிலை அவனது உள்ளத்தை உலுக்கியது. ஆனால் அவனது வீரம்? காதலுக்காகக் கடமையைப் பலியிடுவதா? தினவெடுக்கும் தோள்களுக்கு உணவு வரும் பொழுது அதனை உதறித் தள்ளுவதா?

உள்ளத்தை மறுபடியும் கல்லாக்கிக் கொண்டான் அவன். திரும்பவும் தான் கூறியதையே கூறினான்,

''நான் போருக்குப் போகப் போகிறேன்.'' விம்மினாள் அவள்,

அவனுக்கு மட்டும் காதலில்லையா? அவன் மனம் மட்டும் கல்லா? அவள் கண்ணீர் தன் உறுதியைக் குலைத்துவிடுமோ என்று அஞ்சினான் அவன். அவளை அணைத்து ஆறுதல் கூறினால் அவள் ஸ்பரிசம் தன் உளத்தை மாற்றி விடுமோ என்று பயந்தான்,

தன் வேலையும் வாளையும் எடுத்துக் கொண்டான்.

'நான் போய் வருகிறேன்'. எங்கோ பார்த்தபடி கூறிவிட்டு விறு விறு என்று போய்விட்டான்,

அவனது செய்கையால் அவளது உள்ளம் உடைந்தது. 'ஒரே ஒரு ஆறுதல் வார்த்தையாவது கூறாமல் போனானே,' இதை எண்ண எண்ண அவளுக்குத் துக்கம் பொங்கியது. மூலையில் உட்கார்ந்து விம்மி,, விம்மி அழுதாள். பிறகு அவளுக்கு அவன்மேல் கோபம் பொங்கத் தொடங்கியது.

'இரும்பு இதயம் வாய்ந்தவர்' .. திட்டத் தொடங்கினாள்.

'பெண்களின் உள்ளத்தின் மென்மையைப் புரிந்து கொள்ளாதவர். காதல் சிறிதும் இல்லாதவர். கண் கலங்கக் கண்டும் பேசாமல் போன கல்நெஞ்சுக்காரர்.' அவள் அவனை எண்ணிய போதெல்லாம் அவனது குற்றங்களே அவள் மனக்கண் முன் தோன்றின. அவன் மேல் அடக்க முடியாத கோபம் அவளுக் கேற்பட்டது.

கலிங்கத்தையும் வென்று திரும்பியது படை. எங்கும் வெற்றி முழக்கம், அவனுக்கு வெற்றிப் பெருமிதத்தை மீறிக் கொண்டு காதலியின் எண்ணம் தோன்றியது. தான் அவளைப் பிரிந்த பொழுது அவள் நின்ற சோகநிலை அவன் மனக் கண்முன் தோன்றியது. தான் ஆறுதல் கூறாமல் ஓடி வந்த கொடுமையை எண்ணினான். உடனே ஓடிச் சென்று அவளை அணைக்க வேண்டுமென்ற எண்ணமே அவனுக்கு மேலோங்கி நின்றது, அவன் தன் குதிரையைத் தட்டி விட்டான்.

குதிரையிலிருந்து குதித்து வாசலை இடித்தான் அவன்,

'கண்ணே! கண்ணே!'

தன் காதலனது குறைகளை நினைத்துக் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்த காரிகை அவன் குரல் கேட்டதும் தன் நிலை மறந்து படுக்கையிலிருந்து துள்ளியோடி வந்து தாழ்ப்பாளை நீக்கினாள், அவனைக் கண்டதும் அவளுக்கு அவன் மேலிருந்த கோபம் எல்லாம் பறந்து விட்டன. ஓடிச் சென்று அவனைத் தழுவிக் கொண்டாள் அவள்,

இதோ அப்பாடல்:

பேணுங் கொழுநர் பிழைகளெல்லாம்
பிரிந்த பொழுது நினைந்து அவரைக்
காணும் பொழுது மறந்திருப்பீர்
கனப்பொற் கபாடங் திறமினோ!

## போக்கிரிக் கிளி

இருவர் புதிதாக மணம் செய்து கொண்டவர்கள். அவள் அவன் வரவு நோக்கி ஏங்கிக் கொண்டிருந்தான். அவனோ வருவதாகக் காணவில்லை. துக்கத்தை மறப்பதற்காகத் தன் கிளியை எடுத்தருகில் வைத்துக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருக்கிறாள். அவள்மனம் எல்லாம் அவனிடமே சென்று விட்டதால் கிளியுடன் கொஞ்சும் பொழுதும் அவனைப் பற்றிய எண்ணமே அவளது மனதை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது.

'அடியே என் அன்பர் எப்ப வருவாரடி?' கிளியை அவள் கேட்டாள்.

'அடியே என் அன்பன் எப்ப வருவாரடி?' திருப்பிக் கூறியது கிளி. சொன்னதைச் சொல்கிறதே தவிர ஏக்கத்திற்கு மருந்தாக ஒரு வார்த்தை கூற வேண்டாம் இந்தக் கிளி?

'சொல்லடி எப்ப என் அன்பர் வருவாரடி?' திருப்பியும் கேட்ட அவள் குரலில் ஆழ்ந்த ஏக்கம் தொனித்தது. புத்தியற்ற கிளி அவள் சொன்னதையே திருப்பிக் கூறியது.

திடீரென்று அவள் கண்களை யாரோ பொத்தினார்கள். அவளுக்கா ஸ்பரிசம் தெரியாது? அக்கைகளைக் கண்களிலிருந்து எடுக்காமல் தடவிக் கொடுத்தாள். உள்ளமிரண்டு கலந்தபின் பேச்சிற்கு இடமேது?

வாயாடிக் கிளி இடையில் குறுக்கிட்டது.

'என் அன்பர் எப்ப வருவாரடி?' சுய உணர்வு பெற்றனர் காதலர்,

'கண்மணி வந்து விட்டேனடி!' என்று கூறியபடி கண்களிலிருந்து கைகளை எடுத்துவிட்டு அவள் முகமலரை நிமிர்த்தி நோக்கினான் அவன், நாணத்தால் அவள் முகம் சிவந்தது. கண்கள் நாணத்துடன் சிரித்தன. இதழ்களில் ஒரு நாணப் புன்னகை. அவளின் அழகால் அவன் மயங்கி விட்டான்.

'கண்ணே!'

'ம் '

'உன்முகம் செந்தாமரை தானடி உன்னைப் பார்த்துவிட்டுத் தான் பிரமன் செந்தாமரையைப் படைத்திருப்பான,'

'போங்கள் ' செல்லமாகச் சிணுங்கினாள் அவள்.

'உண்மையாகப் போகட்டுமா?' அவனும் பொய்யாகப் போகப் புறபட்டான்.

'ஐயோ வேண்டாம்,' அவன் கைகளைப் பற்றியிழுத்துத் தன் முகமலரை மூடினாள் அவள். அவன் அவளை இறுக அணைத்தான். காதலர் உலகை மறந்தனர். அருகிலிருந்த கிளியையும் மறந்தனர்.

அடுத்த நாள்.

வீட்டிலுள்ள பெரியவர்கள், சிறியவர்கள், மேற்கூறிய காதலி எல்லோரும் குழுமியிருந்தனர். சுவாரஸ்யமாக ஏதோ கதைத்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது கதாநாயகியின் கிளியை அவள் தோழி அங்கு கொண்டு வந்தாள். எல்லோர் கவனமும் கிளியின்பால் திரும்பியது,

'ஏடி கிள்ளை! என்னடி?' தாய் கேட்டாள்.



போக்கிரிக் கிளிக்கு இது போதாதா? அது உடனே நம்கெட்டித்தனத்தைக் காட்டத் தொடங்கி விட்டது.

'என் அன்பர் எப்ப வருவாரடி?'

'சொல்லடி'

'வந்து விட்டேன் கண்மணி'

'கண்ணே'

'ம்'

'உன் முகம் செந்தாமரை தானடி?' கிளி மேலே பேசிக் கொண்டு சென்றது. மற்றவர்கள் குறும்புச் சிரிப்புடன் இவளை நோக்கினர். அவர்களால் நாணத்தைச் சகிக்க முடியவில்லை. தன் இதழ் மலர்களை கை மலர்களால் பொத்திக் கொண்டு தலைகவிழ்ந்தாள்.

இத்தகைய ஒரு அருமையான ஒரு காட்சியைக் கலிங்கத்துப் பரணி ஆசிரியர் எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

ஒரு பாடலின் மூலம். இதோ அப்பாடல்.

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் பொத்தும் மடநல்லீர்
மணிபொற் கபாடம் திறமினோ

# இ. பே. ந. க.

## சிறுகதைப் போட்டி முடிவு

இ. பே. ந. கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் அதிகமானவர்கள் கலந்துகொள்ளவில்லை. கிடைத்த கதைகளில் எதிர்பார்த்தளவு, பரிசு பெறக்கூடிய கதைகள் தேறவில்லை. வந்த கதைகளில் குறிப்பிடக்கூடியதான யோ. பெனடிற் பாலனின் ''நீலவானம்'' கதையை பிரசுரிக்க தேர்ந்தெடுத்துள்ளோம்.

ஆவணி இதழில் ''நீலவானம்'' ''தேனருவி''யில் இடம் பெறும்.

''இ. பே. ந. க.''வின் கவிதை போட்டி விபரங்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

இளம்பூரணன்
ஈழதேவன்
மதி

தமிழும், சைவமும் தளைத்தோங்க அரும் பாடுபட்ட மட்டக்களப்பின் தமிழ்ப்பெரும் வள்ளல் ''விபுலாநந்த அடிகளாரை தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். அப்பெரியாரின் மறைவு நாளான 19-7-62ஐ முன்னிட்டு—''அருள் செல்வநாயகம்'' அவர்களால் 'தேனருவி''க்கெனச் சிறப்பாக எழுதப்பட்ட ''விபுலாநந்த அடிகள்'' என்னும் இக்கட்டுரையை நேயர்களுக்கு அளிக்கின்றோம்.

# • விபுலாநந்த அடிகள் •

## ''அருள் செல்வநாயகம்''

*1947ம் ஆண்டு!*

அடிகளார் இந்தியாவினுக்குப் புறப்படுவதற்கு முதல் நாள்.

யாழ் நூலாம் பெரும் நூலினை அரங்கேற்ற கரந்தைக்குப் புறப்பட ஆயத்தம் செய்துகொண்டிருந்த நாள்.

நானும் எனது நண்பரும் அடிகளாரைக் காண்பதற்காகச் சென்றோம்.

அடிகளார் அன்று தனிமையிலே தான் இருந்தார்.

யாழ்நூல் அரங்கேற்று விழாவின் ஏறபாடுகளையெல்லாம் விபரித்து நண்பரிடம் சொன்னார்.

எனக்கு அவர் நண்பராக இருந்தாலும் என்னிலும் வயது முதிர்ந்தவர். ஆதலினால்தான் அடிகளாரின் நெருங்கிய நண்பரானார்.

''உங்களால் பண்டைத் தமிழரின் யாழ் பிறந்துவிட்டது. அதனால் தமிழகத்தில் உங்களது சாதனைக்கு என்றுமே அழியாத இடம் இருக்கவே செய்யும் என்றார் நண்பர்.

அடிகள் புன்முறுவல் பூத்தார்.

''யாழ் ஆராய்ச்சி பற்றி திருச்சி வானொலியிலும், செந்தமிழ் இதழிலும பல உண்மைகளை பேசியும் இருக்கிறேன். சொல்லியுமிருக்கிறேன். அவைகள் ஆரம்பக் கருவிகள். கருவியின் வளர்ச்சி தான் யாழ்நூல்—அதுதான் அரங்கேற்று விழா. கரந்தை தமிழ்ச் சங்கம விரிந்த முறையிலே செய்கிறது ... ''

''தமிழ் அறிஞர் நீங்கள். அதனால்தான் தமிழ்ச் சங்கத்தார் செய்கிறார்கள். யாழ்நூலுடன் உங்கள் ஆராய்ச்சி ...''

''நின்றுவிடாது. திருக்குறளினுக்குப் புதிய உரையொன்று எழுதப் போகிறேன். இன்னும் பல '' என்றவாறு அடிகளார் இழுத்தார்.

''தமிழ்துறை உங்களால் கொடுத்து வைத்து விட்டதாயிறறு. நீண்டகாலம வாழ்ந்து தமிழுக்கு நீங்கள் பணிபுரிய வேண்டும்'' என்று நண்பர் வாழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நானும் வாழ்த்துக் கூறினேன்.

''விபுலாநந்த சுவாமிகளின் பெயர் யாழ்நூலுடன் நிற்காமல் இன்னும் அதிகமான நூல்களுடன் விளங்க வேண்டும். விபுலாநந்த இலக்கியம் சிரஞ்சீவியாக வேண்டும்'' என்று நானும் கூறி கரங் குவித்தேன்.

''வயதிலே இளவலாக இருந்தாலும் அறிவிலே முதிர்ந்தவனாக இருக்கிறாய். பிற்காலையில் மிகவும் சிறந்த எழுத்தாளனாக உன்னை தமிழ் உலகம் போற்றும்'' என்று அடிகளார் கூறினார்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஒரு வருடம்கூடச் செல்லவில்லை. ஏன்! பல மாதங்கள்கூட ஆகவில்லை.

அடிகளாரது மரணச் செய்தி காற்றிலே தவழ்ந்து வந்தது. அந்த வேளை நான் மட்டக்களப்பிலே இருந்தேன்.

மட்டக்களப்பின் தமிழ்ப்பெரும் வள்ளல் மறைந்துவிட்டாரென்றால் யார்தான் கலங்கமாட்டார்கள்,

அடிகளாரின் பூதவுடல் புகையிரத மூலமாக மட்டக்களப்பினுக்கு வந்தபோது புகைரத நிலத்திலே ஆயிரக்கணக்கானவர்கள் கூடி வந்துவிட்டார்கள்.

மட்டக்களப்பு நகரெங்கும் கறுப்புக் கொடி. கடைகள் அனைத்தும் சாத்தப்பட்டன பாடசாலைகள் எல்லாம் மூடப்பட்டன.

அடிகளாரது சடலத்தை அவர் ஆக்கிய சிவானந்த வித்தியாலயத்தினுக்கு எடுத்துச் சென்று அங்கேயே அடக்கஞ் செய்யப்பட்டது.

இன்று அடிகளாரது சமாதியும் மணிமண்டபமும்—அவரது சாதனையை நினைவுபடுத்துகின்றன.

விபுலாநந்த வீதியும் அவரை ஞாபகப்படுத்துகிறது. இருந்தாலும் விபுலாநந்தம் அமரத்துவமாகவில்லை.

அடிகளார் மறைந்த • பின்னர் இறுதிச் சந்திப்பு என்னுள்ளத்தைப் பல வருடங்களாக அரித்துக் கொண்டிருந்தது. எப்படியாவது தமிழ்கூறும் நல்லுலகினுக்கு விபுலாநந்த இலக்கியத்தை வழங்கிவிடவேண்டு மென்பது எனது தணியாத தாகம்.

இக்காலத்திலே அடிகளாரது மாணவர்கள் எனப்பலர் முன் வந்து விபுலாநந்த இலக்கியத்தைக் கொண்டுவந்து விடுவதாகக் கூறினார்கள். விபுலாநந்தக் கழகங்கள் நிறுவி விபுலாநந்த இலக்கியம் தோற்றுவிக்கப் போவதாகக் கூறினார்கள். எங்கும் அமர்க்களம். எங்கும் அறைகூவல்! அனைத்தும் பல ஆண்டுகளாகியும் வாய்வீரமாகத் தான் முடிந்தது. செயலில் எதுவுமேயாகவில்லை.

ஆண்டுகள் பல நானும் காத்திருந்தேன் விபுலாநந்த இலக்கியம் பிறந்துவிடுமென்று, பயன்தான் கிடைக்கவில்லை. ஆகவே நானே விபுலாநந்த இலக்கியத்தைக் கொணரும் பணியில் இறங்கினேன்!

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வாயிலாக 'விபுலானந்த அடிகள்' என்ற வாழ்க்கை வரலாறு நூலை வெளியிட்டதுடன், விபுலாநந்த இலக்கியப் பணியினை ஆரம்பித்தேன்.

அடிகளாரது கட்டுரைகள், அனைத்தையும் சேகரிக்க முனைந்தேன். பல பத்திரிகை ஆசிரியர்கள் ஓர் கொப்பிதான் இருக்கிறது தரமுடியாதென்றார்கள். ஆனால் பிரதி எடுத்து அன்புடன் தந்தார்கள். எத்தனையோ பிரதிகள் பணம் கொடுத்து வாங்க வேண்டி வந்தது அதிகமான கட்டுரைகள் தமிழகத்தில் பிரதி பண்ணி எடுக்கவேண்டி வந்தது. ஏராளமான பொருட் செலவு செய்து விபுலாநந்தரின் எழுத்தோவியங்களைச் சேகரித்தேன். அவைகள் ஒவ்வொன்றையும் படித்துப்பார்த்து தரம் பிரித்தேன். தரத்தினுக்கேற்ப வகைப்படுத்திப் பல்வேறு நூல்களாக்கினேன்,

அவற்றுள் ''விபுலாநந்த தேனை'' என்னும் நூலை கல்விப் பிரசுர சபையார் சைவசமய பாட நூலாக்கினார்கள். சென்னை அரசாங்கமும் பாட நூலாக்கியது.

ஈழத்தைப் பொறுத்து விபுலாநந்த இலக்கியம் மலர்ந்தும் பூரணத்துவம் பெறவில்லை, தமிழகத்தைப் பொறுத்து விபுலாநந்த இலக்கியம மலர்ந்தே விட்டது.

விபுலாநந்த இலக்கியத்தால் விபுலாநந்த அடிகள் என்ற பெயர்

# கொழும்பில் நாடகவிழா

சிரிப்பு நாடகங்கள் மூலம் பன்னிரண்டு வருடங்களாகப் பல்லாயிரக் கணக்கான இரசிகர்களின் இதயத்தில் நிரந்தர இடம் கொண்ட, வா கோட்டடிக்கு, ஆச்சக்குச் சொல்லாதே, விதியா சதியா, மின்னுவதெல்லாம் பொன்னல்ல - முதலாம் பதினைந்துக்கும் அதிகமான நாடகங்களை மேடையேற்றித் தொடர்ந்து நாடகக் கலையின் உயர்வுக்கு உழைத்துவரும் 'ராஜ் சுவை நாடகமன்றம்' அளிக்கும் நாடகவிழா 14, 15-7.62 பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

**14-7-62 'ஆச்சிக்குச் சொல்லாதே'**

**15-7-62 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல'**


தமிழ் மக்களிடம் சிரஞ்சீவித் தன்மை பெற்றதாகிவிடும். அந்த ஒரு முயற்சியிலே இன்று நான் திருப்தி அடைகிறேன். எனது தனித் திருப்தி தமிழ் கூறும் நல்லுலகில் வாழும் ஒவ்வொருவருடைய திருப்தியாகும்.

விபுலாநந்த அடிகள் மறைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்டன. இருந்தும் விபுலாநந்த இலக்கியத்தால் பதினையாயிரம் ஆண்டுகளுக்கு விபுலாநந்த அடிகளார் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

நான் சாதாரண ஓர் மனிதன், விரித்துச்சொன்னால் ஓர் எழுத்தாளன். அவ்வளவுதான். ஆனால் அடிகளார் அவ்வாறில்லை. முத்தமிழ் முனிவர், தமிழ்ப்பெருங் கொடை வள்ளல், தமிழ் வித்தகர், தமிழ்ப் புலவர், தமிழ் அறிஞர் இன்னும் எத்தனையோ வகையாகச் சொல்லலாம் அத்தனைக்கும் விபுலாநந்த இலக்கியம் விபுலாநந்த அடிகள் என்ற பெயரைச் சந்ததி சந்ததியாகச் சொல்லிக் கொண்டே இருக்கும்.


# ஆவணி ஊற்றில் . . .

யாழ்ப்பாணம் தேவனின்

**'மனமாற்றம்'**

(சிறுகதை)

நீலாவணனின்

**'காதல்'**

(கவிதை)

செ. வேலாயுதபிள்ளை பி. ஏ.

**'நான் கண்ட விபுலாநந்த அடிகள்'**

(கட்டுரை)





# வானொலி

### "ஆனந்த பைரவி"

ஆனி 4 பிற்பகல் 7-30 மணி— வி. செல்லத்துரை பாட்டு.

''கௌள'' ராகத்தில் ''ஆண்டருள்'' என்னும் பாடலுடன் ஆரம்பித்த கச்சேரிகளைகட்ட இந்த ''கௌள ராகம்'' உதவவில்லை. கன இராகங்களில் கௌள ராகம்'' ஒன்று என்றும், மத்திம ஆலாபனையிலால் துலங்கும் என்றும நினைத்துக் கச்சேரியை ஆரம்பித்திருக்கலாம். ஆனால் விர்த்தியான ஆலாபனைக்கு இடங் கொடுக்காத ஓர் இராகம். அதிலும் சுத்த ஸ்வரங்களை முக்கியமாய் ஏகஸ்ருதி ரிஷபமுள்ள இராகம் களைகட்ட உதவுமா என்பதை ஆலோசிக்கவே இல்லை.

கச்சேரி என்பது கேட்போருக்கு 'கேட்க வேண்டும்' என்னும் ஆவலை எழுப்புவதே. அதன் முதல் குறிக்கோள் 'நன்றாக இருந்தது' என்று சொல்லும்படியாய் நடை முதல் முடிவுவரை அமைய வேண்டுமென்பதே அடுத்த குறிக்கோள்.

தீவிர ஸ்வரங்களை உடைய இராகங்களை இப்பாடகர் தம் எதிர்காலக் கச்சேரிகட்கு ஆரம்பப் பாடலாய் அமைப்பர் என்று எதிர்பார்க்கின்றோம், இக்குருதி மேலும் அதிகம் கீழ்சஞ்சாரங்கள் உள்ளது. இச்சிறு குறைபாடுகளால் கச்சேரி களைகட்டவில்லை.

சில இடங்களில் அடித் தொண்டையால் சிரமப்பட்டுப் பாடுவது தெரிந்தது. தாரஸ்தாயி பஞ்சமம் வரை லாவகமாய்ச் செல்லும் சாரீரம் கீழே சோபிக்கவில்லை.

ஒரு பாடகர் பாடும்போது எல்லா ஸ்தாயிகளிலும் நீதி செலுத்த வேண்டும். தாரஸ்தாயியை மட்டும் கவனித்து மற்ற ஸ்தாயிகளைப் பொருட்படுத்தாது விடின் இசைக்குத் தாரதம்மியமாகி விடுமன்றோ.

''கௌள ராகம்'' போன்ற ஓர் இராகத்தில் ஸ்வரம் பாடுவது பாராட்ட வேண்டியதே. ராகத்தில் கௌள ரிஷபம் சுத்தமாகப் பேசினாலும் இராகத்தில் கலப்பு தவிர்க்க வேண்டும், இராகம் சிறுகப் பாடினாலும், கலப்பற்றுச் சுத்தமாகப் பாடுவதில் 'வித்துவத்துவம்' தங்குமே அல்லாது சாம்பாராய் பலராகங்கள் கலப்பதிலல்ல. கௌள ராகத்தின் பின் ''பூர்வி கல்யாணி'' தோந்திருக்க வேண்டியதில்லை! கச்சேரியைச் சோபிக்க வைக்க இராகத் தேர்வும் அவசியம். 'சுத்த ரிஷபமும்'' 'காகலி நிஷாதமும்', 'அந்தர காந்தாரமுமுள்ள கௌள ராகத்தின் பின் அதே காகலிநிஷாத அந்தர காந்தார சுத்த ரிஷபம் சோபிக்குமா? ''ஆனந்த நடனமாடுவார்'' என்னும் உருப்படியில் சில நல்ல பிடிப்புகள் காணப்பட்டன. ''பாதி நதி மதி'' என்னும் இடத்தில் நிரவல் செய்யும்போது ப ப, ப என்னும் போது சுத்த தைவதம் தொடுவது விலக்கப்படல் வேண்டும். ஸ்வரம் நன்றாக அமைந்தது. முக்கியமாய் பஞ்சம வர்ஜப் பிரயோகங்கள் அழகைக் கொடுத்துமெருகு

கேற்றியது. ஸ்வரம் பாடிவிட்டு 'கிருதி'யோடு சேர்ந்த 'சிட்டை' ஸ்வரத்தைப் பாடாது விட்டிருக்கலாம். 'கல்பனா'ஸ்வரம் பாடும் உருப்படியில் சிட்டைஸ்வரம் ஒருமுறை பாடினால் போதும். கல்பனா ஸ்வரத்தின் பின் சிட்டைஸ்வரம் பாடினால் கல்பனாஸ்வரத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிடும்.

பொதுப்பட ஊக்கப்படுத்த வேண்டிய பாடகர். ''பிருகா') நன்றாகப் பேசுகிறது, தாரஸ்தாயி பாடுமளவிற்கு மந்திர ஸ்தாயியையும் பாடக் கூடியதாய் ஸ்ருதியை அனுசரணையாக்கினால் நன்று,

ஆனி 17, பிற்பகல் 7.30 மணி— செல்வி தங்கராணி கனகசபை பாட்டு.

''தர்பாரின்'' ஆடிய பாதாவுடன் ஆரம்பித்தாலும் உருப்படி சௌக காலத்தில் அமைந்ததால் கச்சேரி களைகட்டவில்லை. மேலே திரு. செல்லத்துரை அவர்களின் கச்சேரியின் களைகட்டும் பகுதியை அனுசரிப்பின் நன்று. ''தர்பார்'' ஓர் உயர்ந்த இராகமாயினும், மத்திம காலப் பிரயோகங்களை நன்று துலங்குமாயினும், நல்ல இராகமாயினும் உருப்படி சௌக காலமாய் அமைந்து விட்டதே. என் செய்யலாம். 'தமிழ் உருப்படி என்று சொல்ல முடியாத வண்ணம் சொற்களை உச்சரித்தார். இது (முற்றாகத்) தவிர்க்கப்படல் வேண்டும். மூக்கால் பாடுவதும் தவிர்க்கப்படல் வேண்டும். ''தோடி''யில் ''முன்று ராவணா'' ராகம் முறைப்படி கீழேயிருந்து மேலே, மேலே தார பஞ்சமம் வரை சென்றது முறையான சிட்சையைக் காண்பித்தது. ஆனால் ராகத்தில் விறு விறுப்பு இல்லை. ஸ்ருதி கனிசமாய் இருந்தது. இப்படி இருந்தும் மத்யம காலமே காணப்படவில்லை என்பது ஞானக் குறைவாய் இருக்க முடியாது; சாதகம் போதாது.

## வருந்துகிறோம்

பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான கனக செந்திநாதன் அவர்களின் திருக்குமாரத்தியின் அகாலமரணச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். மகளின் பிரிவால் கலங்கும் பெற்றோர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆ-ர்.

எத்தனை தான் இசை கற்று எத்தனை பரீட்சைகள் ஏற்பினும் எமக்கு எந்த ஒரு ஸ்தாபனமும் இசையைக் கடல்போல் கரையின்றி வழங்கவே முடியாது. குறைவற்ற அனுவத்தனை பிசகாத வழியைக் காண்பித்து அத்திவாரத்தை அமைக்க முடியுமே தவிர, எவரைக் கொண்டும் பாடுவிக்க முடியாது. பாடுவதோ, வாசிப்பதோ எமது முயற்சி, ஊக்கம், ஆர்வம், பொறுமை இவற்றைப் பொறுத்ததே. அள்ளி எடுத்து விடலாம் என்று நினைத்தாலே கற்பனை ஊற்று அடைபட்டுவிடும்.

நிரவலில் தாரஸ் தாயியைத் தவிர்த்தது ஏனோ? கல்பனாஸ்வரம் 4-8 ஆகப் பாடியபோது மத்திம காலம் ஸ்வரம் வெகு சொற்பமாய் அமைந்ததால் அங்கும் விறு விறுப்பு இல்லை.

மணிரங்கில் ''கல்யாணமூர்த்தயே'' சாரீரம்கல்பனைக்கு அமைய மறுத்து இடக்குப் பண்ணியது. இது கூட சௌளகமாய் அமைந்தது ரசிகர்களை வலிந்து கேட்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது. மணிரங்கைப் போன்ற இராகத்திற்கு ஸ்வரம் பாட நினைத்ததே வித்துவத்தைக் காண்பிக்கின்றது. இத்தனை குறைகட்குள்ளும் ஸ்ருதி மட்டும் கனிசமாய் அமைந்தது மெச்சத்தக்கதே.

# இலக்கிய பேனா நண்பர் கழகம்

சந்திப்பு 1 எமது இலக்கியம் வாழ்வுக்காக கடிதம் 3

# ஈழத்து எழுத்து

—இரான்—

இந்த மாதம் நமது - அதாவது ஈழத்து - இலக்கிய நிலைபற்றி ஆராய்வோம். ஈழத்துச் சிருஷ்டி எழுத்தாளர்கள் உள்ளடக்கம் என்பதிலேயே சீரிய கவனம் செலுத்துகிறார்கள் எனப்படுகிறது. இது பெருமையல்ல. அப்படிக கருதுபவர்களுக்கு நமது அனுதாபங்கள், நமது எழுத்து தரம் பெறவில்லை என்பதை வெகு நாகரிகமாக இதைத் தவிர வேறு வழியில் சொல்ல முடியுமா? ''உள்ளடக்கம் நேர்த்தி என்றுவிட்டால் மட்டும் ஒரு கதை இலக்கியமாகிவிடுமா ஐயா?'' என்ற கேள்வியைக் கேட்டுப் பார்த்தால் எல்லாம் புரிந்து விடுகிறது,

வாசகனுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்தி நல்ல படைப்பை இனங்கண்டு ரசிப்பதற்கு உதவுபவர்களான விமர்சர்கள் - நமது விமர்சகர்கள் - மயக்கத்தை உண்டு பண்ணி மயக்கி, மயங்கிக் கிடக்கிறார்களே. ஒரு உதாரணம்: உள்ளடக்கம் தான் முக்கியம் என்பது ஒரு வாதம் (அதை மறுப்பதற்கு யாரும இல்லாதது அதிசயம்). இந்த வாதத்தின் உறைப்பிலே (இதுபோதும் என்பதுபோல) மற்றைய அம்சங்களை மறக்கும் அலட்சியமும்; மறுக்கும் தொனியும் இருப்பதைக் காண்கிறோம். இங்கே தான் ஆபத்து; விமர்சனத்தில் அரசியல் மேடையில் அதிரும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நறுக்கு விவகாரம், வழி தவறி வந்து விட்டதன் அனர்த்தம், எப்படி?

சொல்ல ஏதோ உற்றவன் ஆனால் இலக்கியப் பரிச்சையோ, லாவகமோ இல்லாதவன் 'சீப்'பாக இலக்கிய கர்த்தா ஆகிவிடலாம். கள்ளுக் குடித்துவிட்டுத் தெருவாலே ஞானம் பேசிக் கொண்டு போகிற கந்தப்பனும் ஒரு இலக்கிய கர்த்தா. அவனிடமும் உள்ளடக்கம் உண்டுதானே! இப்படித் திருப்பித் திருப்பிச் சொல்வதால். உள்ளடக்கம் இல்லாத ஒன்றும் உண்டோ என்று கேட்கத் தோன்றுகிறது. ரபேலின் முன்னோடிகள் கூடத் தங்கள் காலத்தை எதிர் நிற்கும் லோகாயத்தைக் கண்டு அஞ்சுவதாகத்தான் சித்திரித்திருக்கிறார்கள் என்று ஆங்கில விமர்சகர் ஒருவர் கூறியிருக்கிறார். உள்ளடக்கம் என்றதற்காக மட்டும் இந்த உதாரணம்.

நாம் உள்ளடக்கம் என்பதை வற்புறுத்திப் பேசுவதில் என்ன பயன் கண்டோமென்றால் எங்களுடைய கற்றுக்குட்டித்தனங்களை மறைத்து மயக்குவதே. இதில் வெற்றி கண்டாயா என்பது உன்னை நீயே செவ்வையாக ஏமாற்றிக் கொண்டாயா என்பதே. இந்தப் போக்கான இருவர் - டானியல்,

டொமினிக் ஜீவா ஐம்பதாம் ஆண்டளவில் எழுதத் துவங்கியவர்கள் - வளர்ச்சி தடைப்பட்டவர்களாக இன்னும் இளம் எழுத்தாளனைப் போல எழுதுவது எதைக் குறிக்கிறது? - இந்த மயக்கத்தைத்தான்.

தமிழ் நாட்டோடு ஒப்பிட்டு, எழுத்துத் துறையில் ஈழம் பின் தங்கிவிட்டது என்று கூறப்பட்ட போது (வருடக் கணக்கோடு) 'தெய் தெய்யென்று' கச்சை கட்டிக்கொண்டு எழும்பி, 'உன்னுடைய கிலியம்பறை தெரியாதோ பொறிக்கி'' என்பது போல அம்பு எய்தது சுய அபிமானத்தின்பாற் பட்டதே தவிர, உண்மையொளியோடு பேசியதாகாது. அன்றைக்கு முதலில் களத்திலே இறங்கி எமது ஆதரவுக்குள்ளான அதே பேர்வழிதான் நமது எழுத்து பின்தங்கியிருக்கிறது என்று பின்னர் சுய நிலையில் எழுதிக் காட்டியிருக்கிறார்.

கிழமைக்குக் கிழமை தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளில் வெளிவரும் கதைகளில் அனேகமாக எல்லாமே மறுநாள் செத்துவிடுவது போலத்தான் நமது பத்திரிகைக் கதைகளும் சாதாரணகதைகளின் கதி இப்படி. ஆனால் அங்கே திறமை மிக்கவர்கள் என்று மதிக்கப்படுபவர்களோடு சமன் நிற்க தற்போது இங்கு யார் இருக்கிறார்கள். இத்தனைக்கும் நாம் எழுத்தைப் பிய்த்து பிடுங்குவதுபோல அவர்கள் செய்வதில்லை. சுய பெருமை பேசுவதில்லை. ஜெயகாந்தன் சொன்னாராமே நம்மைப் பற்றி, புளுகர்களென்று. சென்ற இதழ் தேனருவியில் படித்தோம்.

இப்படிப் பேசுவதால் நாம் உள்ளடக்கத்தின் முக்கியத்துவத்தை மறுக்கிறோம் என்பதல்ல. ஆனால் கடைதையும் கத்தி மயக்கம் ஏற்படுத்தி நமது பலவீனங்களை மறைக்கக் கூடாது என்பதே நம் கட்சி.

## இ. பே. ந. கழகத்தின்
### முதல் பொது நிகழ்ச்சி
## கதம்பவிழா

யூலைமாத பிற்பகுதியில் கொழும்பில் நடைபெறும், மட்டக்களப்பு கலைஞர்கள் பங்கு பற்றுகின்றார்கள்.

முன்னேற்றத்திற்கு இது வழியாகாது. ஆக்கமானதாக நமது செயல் அமையட்டும்,

இந்த மயக்கம் ஒரு பக்கம் இருக்க, இன்னொரு பக்கத்தில் வேண்டியன்; நண்பன், உறவினன் என்று முதுகு சொறிகிற பழக்கம் இலக்கியத்தில் வலுத்து வருகிறது. நேர்மையான பார்வையும் நிடு நின்ற போக்கும் தேய்ந்து போய் விட்டன. அந்தரங்க சுத்தியற்ற இப்படியான செய்கைகளையும் நமது எழுத்தின் பிற்போக்கான நிலைமைக்குக் காரணமாக்கலாம். கண்ட குப்பை கூழமெல்லாம் மேள தாளத்தோடு புத்தக உருவில் வெளிவருகின்றது. அதே சமயம் பிரபலமான படைப்புக்கள்; நமக்குப் பெருமை தேடித் தருபவை (இலங்கையர்கோன், வைத்தியலிங்கம், சம்பந்தம், பொன்னுத்துரை ஆகியோரின் படைப்புக்கள்) தேடுவாரற்றுக் கிடக்கின்றன, வாசகர்களை அணுக முடியாமல் இருக்கின்றன.

ஆகவே இலக்கியத் தொழிலை வெறும் மேடைப் பேச்சாக்கி குடும்பச் சிக்கலாக்காமல் நம்மை நாமே சோதனை செய்துகொண்டு ஆக்க பூர்வமான செயலில் ஈடுபடுவோம்.

செய்தி விமர்சனம்

# இளம் எழுத்தாளர் மாநாடு

### யாழ்ப்பாணம்

கடந்த 24-6-62ம் திகதி யாழ்ப்பாண இலக்கிய அன்பர்களைப் பொறுத்தவரை ஒருவிசேட நாளாகும், ''இரத்தத் துடிப்பிலே இளசுகள் துள்ளுதுகள். இதுகள் என்னத்தை வெட்டிவிழுத்தப் போகுதுகள்?'' என்று ஏளனமாக நோக்கப்பட்ட யாழ். இளம் எழுத்தாளர் சங்கம் தனது ஓராண்டு நிறைவு விழாவை மிகச் சிறப்பான முறையில் வண்ணை. வைத்தீசுவர வித்தியாலயத்தில் கொண்டாடியது, யாழ்ப்பாணத்தில் இதுவரை எந்த எழுத்தாளர் கூட்டத்திற்கும் இப்படியாக மண்டபம் நிறைந்த மக்கள் திரள் வந்தது கிடையாது என்றால் அது மிகையாகாது.

காலையில் புத்தக, புகைப்படக் கண் காட்சிகள் நடைபெற்றன. புகைப்படக் கண் காட்சியில் பல பிரபல எழுத்தாளர்களின் புகைப்படம் இடம்பெறவில்லை என்பது மட்டுமல்ல, ''ஈழத்தில் அதிகமான எழுத்தாளர்களைக் கொண்ட ஒரே சங்கம்'' என்று கூறப்பட்ட மேற்படி சங்கத்தைச் சேர்ந்தவர்களில் கூட விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலருடைய படங்களே இடம் பெற்று இருந்தன. முயன்றால் இக்குறையைத் தவிர்த்து இருக்கலாம்.

மாநாட்டையொட்டி மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. இளம் எழுத்தாளர்கள் பலரை உற்சாகப் படுத்தி முன்னணிக்குக் கொண்டு வரும் திரு. 'சிற்பி' அவர்களிடம் வெளியீட்டுப் பொறுப்பை ஒப்படைத்தது பாராட்டத்தக்கது. மலர் கவர்ச்சியாகவும் கனமாகவும் இருந்த போதிலும் ஒருசில கவிதைகள் தவிர ஏனைய விடயங்கள் ஒன்றும் எடுபடவில்லையே. மூன்று சிறுகதையில் ஒன்றுகூட மலருக்குச் சிறப்புக் கொடுக்க உதவவில்லை. பரிசு பெற்ற கதையை வெளியிட்டிருந்தால் அக் குறை தீர்ந்திருக்கலாம்.

தான் தோன்றிக் கவிராயர் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் ஒன்பது இளங் கவிஞர்கள் பங்கு பற்றினர். தினகரன் விழாவிலே 'கேட்ட' கவிராயருக்கும் இ. எ. மாநாட்டில் 'கேட்ட' கவிராயருக்கும் இடையே வெகுதூர இடைவெளி கவிஞர்கள் எஸ், ஜி. கணேசவேல். வே. தனபாலசிங்கம் (தணலன்) பா. சத்தியசீலன் ஆகியோரது கவிகள் பாராட்டும்படியாக இருந்தன. இறுதியாகப் பாடிய பா. சத்தியசீலன் உச்சிப் படிக்கே சென்று 'சபாஷ்' வாங்கிக் கொண்டார், ஆனால் அவரது கவியில் முற்பகுதியில் உள்ள சுவையைப் பிற்பகுதியில் உள்ள ''காய்ச்சல்'' கெடுக்கிறதே! ஒலிபெருக்கி ஒத்துழைக்காததால் மேடைக்கு அருகில் இருந்தவர்களைத் தவிர மற்றவர்களால் எதையுமே கேட்க முடியவில்லை. ஒரு கவிஞர்கூட கவிதையைக் கவிதையாகப படிக்காதது குறையாக இருந்தது. இப்பொழுது இருந்தே கவிதையை ஓசையுடன் படிக்க இளங்கவிஞர்கள் முயலல் வேண்டும்.

''ஏன் எழுதுகிறோம்?'' என்ற கருத்தரங்கம சோபிக்கவில்லை, இல்லாமலிருந்தால் கூட பரவாவாயில்லை என்று கூறத் தோன்றுகிறது.

''வாசக மாணிக்கனார்'' பற்றிய நவீன கதாப்பிரசங்கம் கலைவா

ணரை நினைவூட்டியது. சபாஷ் ஸ்ரீகாந்தன்; மாநாட்டுக்கு சிறப்பைக் கொடுத்த அம்சம் இறுதியாக நடைபெற்ற ''வருஷம் பிறந்தது முன்னம் முன்னம்'' நாடகமே.

வாழ்த்துச் செய்தி வாசிப்பது என்று கூறிக்கொண்டு மாறிமாறிப் பலரும் மேடைக்கு வந்து கமராவுக்கு 'போஸ்' கொடுத்தது கேலிக் கூத்தாக இருந்தது. ஆரம்பத்தில் பாடப்பட்ட வாழ்த்துப் பாடலில் சிங்களத்தையும் வாழ்த்தியிருந்தார்கள் பலே! ஆனல் ஐக்கிய உணர்வுடன்தான் அவ்வாறு பாடப்பட்டதா அல்லது ?

மொத்தத்தில் யாழ் நகருக்கே பெருமை தரக்கூடிய முறையில் மாநாட்டை சிறப்புற நடத்தியதற்கு இளம் எழுத்தாளர் சங்கத்தினரை எவ்வளவு பாராட்டினலும் தகும். இந்தவிழா யாழ்ப்பாணத்தில் உள்ள வளர்ந்த எழுத்தாளர்களுக்கும் அவர்களது அமைப்புக்களுக்கும் ஒரு சவால் என்று கூடக் கூறலாம்.

—''நீலக்குயில்''

## விமர்சனம்

முந்தின நாள் இரவு நாடகம் நடந்து முடிந்தது அதில் நடித்த முக்கிய நடிகை மறுநாள் படுக்கையில் சாய்ந்தபடி அன்றைய தினசரிகளில் அந்த நாடகத்தைப்பற்றி வெளியான விமர்சனங்களைப் படித்துக்கொண்டிருந்தாள். அநேகமாக எல்லாத் தினசரிகளிலும் அவளைப் பாராட்டியே எழுதியிருந்தார்கள். ஆனல் ஒன்றில் மட்டுமே, ''அந்த அம்மாளின் நடிப்பு மகா மோசம்'' என்று எழுதியிருந்தது.

உடனே நாடகத்தை எழுதிய ஆசிரியருக்குப் போன் செய்து, ''இந்த பயல் எழுதியிருக்கிறதைப் பார்த்தீர்களா?'' என்று ரோஷத்தோடு விசாரித்தாள்.

அதற்கு அவர், ''அதைச் சட்டை செய்யாதீர்கள். இந்த விமரிசனுக்கு சொந்தமாக ஒன்றும் தெரியாது. கிளிப்பிள்ளை மாதிரி ஊரில் உள்ளவர்கள் பேச்சையெல்லாம் கேட்டு அப்படியே எழுதியிருக்கிருன்'' என்று சமாதானப்படுத்தினர்.


யாழ்ப்பாணத்தில்
நமது ஏஜென்சி
த. தம்பித்துரை
நியூஸ் ஏஜென்ற்
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


தேனருவியில் இடம்பெறும் கதைகள் யாவும் கற்பனையே! கட்டுரைகளில் வெளியாகும் கருத்துக்கள் யாவும், அவற்றை எழுதியவர்களுடையனவே!


இலங்கை எங்கிலும் இணையில்லாது
விளங்கும் ஒரே ஒரு பீடி
ராஜபீடி ஸ்பெசல்




ராஜபீடி ஸ்பெசலை
இன்றே வாங்கி உபயோகியுங்கள்.
" ராஜபீடி கம்பெனி "
399, பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அவின்யூ
கொழும்பு-14

Registered as a News Paper in Ceylon THENARU

கண்ணைக் கவரும் வண்ண முகப்பு!
எண்ண இனிக்கும் இலக்கியப் படைப்பு!

★

# "தேனருவி"

## ஆவணி இதழ்

கவிஞர் நீலாவணன் தரும்

"காதல்"

★

காசி. ஆனந்தன் தரும்

"புகைப்படம் ஒன்று"

★

மகாகவி தரும்

"கவிதை ஒரு பெண்"

★

இராஜபாரதி - முருகையன் ஆகியோரின்

"கவிதை பிறந்த கதை"

ஆகியவற்றுடன் இன்னும் பல சுவை தரும் அம்சா
களைக்கொண்டு ஊற்றெடுக்கிறது

Edited and published by S. Arunmoli Thever Residing at 31/3, Hampden La
Colombo-6 on July 1st 1962 for the proprietor of the THENARUVI and Prin
at Rajeswari Press. 18, Prince Street, Colombo 11.